Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 295 | செவ்வாய்க்கிழமை | புரட்டாதி 05 ஆம் நாள் 21 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்:16 | விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## தொற்று 1,509 சாவு 93

கொழும்பு, செப். 21
இலங்கையில் நேற்று ஆயிரத்து 509 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப் பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரி வித்துள்ளது.

14

# காணாமலாக்கப்பட்டோருக்கு விரைவில் மரணச் சான்றிதழ்!

ஐ.நா. ஆணையாளரிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

புலம்பெயர் தமிழர்களையும் பேச்சுக்கு அழைக்கிறார்



கொழும்பு, செப்ரெம்பர் 21
"இலங்கையில், காணாமற்போனோர் தொடர்பில், அரசு என்ற ரீதியில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுப்பேன். மரணச் சான்றிதழ்களை வழங்கும் நடவ டிக்கைகளை விரைவுபடுத்துவேன். என்று ஐ.நா. பொதுச்செ யலாளர் அன்டனியோ குட்டரெஸ்ஸிடம், இலங்கை ஜனாதி பதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

14

## யாழ்.பல்கலைப் பட்டமளிப்பு நிகழ்நிலையில் வேண்டாம்

பிற்போடுமாறு ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 21
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நிகழ்நிலையில் நடத்தப்படுவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளதாவது,

14

## சட்ட நடவடிக்கைகளின் பின்னர்தான் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு

ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு

கொழும்பு, செப். 21
"பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்டகாலமா கத் தடுப்பிலுள்ள தமிழ் இளைஞர் கள் தொடர்பிலான சட்டச் செயற் பாடுகள் முடிவடைந்த பின்னர், நீண்டகாலம் தடுப்பில் இருந்தமை யைக் கருத்திற்கொண்டு, ஜனாதிப தியின் பொது மன்னிப்பின் பேரில் அவர்களை விடுவிப்பதற்கு நான் தயங்கப் போவதில்லை.
இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, ஐ.நா.பொதுச் செயலா ளர் அன்டனியோ குட்டரெஸ்ஸிடம் தெரிவித்தார்.

14

கொரோனாவால்

## தாய் உயிரிழக்க பிள்ளை தப்பியது

முல்லைத்தீவு, செப். 21
இளம் தாய் ஒரு வர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் குழந்தை பெற்றநிலை யில்,

11

## கொரோனச் சடலத்தை விதிமுறைமீறி வீட்டுக்கு எடுத்துச்சென்று அஞ்சலி!

அரச உயர் அதிகாரிகள் உடந்தையா?

கிளிநொச்சி, செப். 21
கிளிநொச்சியில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவரின் சடலத்தை, அவருடைய வீட் டுக்கு முன்பாகக் கொண்டு சென்று வைத்து பொதுமக்கள் அஞ்சலி செலுத்த அனுமதித் தமை பெரும்

14

## வாள், ஹெரோய்னுடன் சென்ற நால்வர் யாழில் காருடன் கைது

அவர்களில் பிரதான நபர் தென்பகுதி மாபியாக்களுடன் தொடர்பு

யாழ்ப்பாணம், செப். 21
சொகுசு காரில் பயணித்த நால் வர், ஹெரோய்ன் போதைப் பொருள் மற்றும் வாள் வைத்தி ருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டனர். அவர்க ளில் ஒருவர், போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் கொழும்பு மாபியாக் கும்பலுடன் தொடர்புடையவர் என்

11

## அடாவடியில் ஈடுபட்ட 7 பேரை மடக்கியது புலனாய்வுப் பிரிவு

யாழ்.கொழும்புத்துறையில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 21
பாசையூர் பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்து அடா வடியில் ஈடுபட்டுத் தப்பித்த கும்பல் ஒன்றைச் சேர்ந்த 7 பேரை யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுக் கைதுசெய்தனர்.
அடாவடியில் ஈடுபட்டுவிட்டுச்சென்ற ஒரு

14

அமெரிக்காவில்

## ஜனாதிபதி கோத்தாவுக்கு எதிராக தமிழர்கள் நாளை போராட்டம்

கொழும்பு, செப். 21
ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றுவதற்காக அமெரிக்காவுக்குச் சென் றுள்ள இலங்கை ஜனாதி பதி கோத்தாபய ராஜபக்ச வுக்கு எதிராகப் போராட அமெரிக்கா வாழ் தமி ழர்கள் தயாராகி வருகின் றனர்.
'திரும்பி போ கோத்தா'

14

இன்னும் சில மாதங்களில்

## கொரோனாவின் 5ஆவது அலை; தடுப்பதற்கு ஆறு பரிந்துரைகள்

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, செப். 21
இலங்கையில் கொரோனா வைரஸின் ஐந்தாவது அலை ஏற்படுவதைத் தடுப்பதற்கு பின்பற்ற வேண்டிய ஆறு பரிந்துரைகளை அரச

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தடுப்பூசியால் கணிசமான முன்னேற்றம்

## தொற்றுக்கள், இறப்புக்கள் குறைவடைகின்றன சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு




**மன்னார், செப். 21**

**கொரோனாத் தடுப்பூசிகள் துரித கதியில் ஏற்றப்பட்டதன் காரணத்தால் மன்னார் மாவட்டத்தில் தொற்றுக்களும், இறப்புக்களும் குறைந்து வருகின்றன என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் செப்ரெம்பர் மாதம் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கையும் கடந்த மாதத்தோடு ஒப்பிடும்போது இந்த மாதம் குறைவாக காணப்படுகிறது.

இதற்கு முதன்மைக் காரணங்களாக எமது தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் வினைத்திறனாக மேற்கொள்ளப்பட்டதுடன், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளதையும் குறிப்பிடலாம்.

ஓகஸ்ட் மாதத்தில் ஒட்டுமொத்தமாக 643 கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர். அதாவது ஒருநாளின் சராசரி 20 தொடக்கம் 21ஆகக் காணப்பட்டது.

இதில் இந்த மாதம் நேற்று (நேற்றுமுன்தினம்) வரை 351 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். சராசரி 18ஆகக் காணப்படுகின்றது.

ஓகஸ்ட் மாதம் பத்து உயிரிழப்புக்கள் கொரோனாத் தொற்றால் இடம்பெற்றன.

இது மூன்று நாளைக்கு ஓர் உயிரிழப்பு என்ற விகிதத்தில் காணப்படுகிறது. செப்ரெம்பர் மாதத்தில் இது கிட்டத்தட்ட 5 அல்லது 6 நாளைக்கு ஓர் உயிரிழப்பு என்ற விகிதத்தில் குறைவடைந்து காணப்படுகிறது என்றார். (ஐ-213)

# பிற்பகல் வேளையில் மழைக்குச் சாத்தியம்

கொழும்பு, செப். 21

நாட்டின் பல பிரதேசங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வட மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்குத் திசையிலிருந்து வீசக்கூடும். மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 தொடக்கம் 45 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (ம-4)



# யாழ். பல்கலை சுகநல நிலையத்துக்கு ஒருதொகுதி உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுகநல நிலையத்தின் பாவனைக்காக யாழ்ப்பாண மருத்துவ பீட கனடா பழைய மாணவர்களால் ஒருதொகுதி சுகாதார உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவிடம், யாழ்ப்பாண மருத்துவ பீட கடல்கடந்த பழைய மாணவர் அமைப்பின் கனடா கிளைத் தலைவர் மருத்துவர் மயில்வாகனம் மயிலாசனன் கையளித்தார்.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி மருத்துவ கலாநிதி இ.சுரேந்திரகுமாரன், பதிவாளர் வி.காண்டீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-20)

# மரக்கறி வியாபாரிகளிடம் விலை தொடர்பான ஆய்வு

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை மற்றும் சங்கானை ஆகிய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நடமாடும் மரக்கறி வியாபாரிகளிடம் விலை தொடர்பான கள ஆய்வு அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலரின் கட்டளைக்கமைவாகவும், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வட மாகாண உதவிப்பணிப்பாளரின் வழிகாட்டலுக்கமைவாகவும், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வீடுகளுக்கு பொதிசெய்யப்பட்ட பொருள்களை விநியோகிக்கும் வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டதுடன், விலை தொடர்பான விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டன. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் விசாரணைசெய்யப்பட்டதுடன் அதற்கான தீர்வுகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டன. அத்துடன் முறைகேடான வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ஐ)






# மரக்கன்றுகள் நடுகை

மானிப்பாய்,செப்.21

10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் மானிப்பாய் பிரதேச சபை அலுவலகத்திலும் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தின் வெளிப் பகுதியிலும் நேற்று முன்தினம் மரக்கன்றுகள் நடப்பட்டன.

பீதாம்பரம் அறக்கட்டளை நிதியத்தின் "மரம் நடுவோம் மண்வளம் காப்போம்" என்னும் மகுடவாக்குக்கு அமைய காங்கேசன்துறை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகம், இருபாலை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகம், உரும்பிராய் லயன்ஸ் கழகம் மற்றும் மானிப்பாய் லியோக் கழகம் ஆகியன இணைந்து இந்த திட்டத்தை ஆரம்பித்து வைத்தன. (ஐ-9)

# 20- 30 வயதுப் பிரிவினருக்கு கிளிநொச்சியில் தடுப்பூசி





கிளிநொச்சி, செப்.21

கிளிநொச்சி மாவட்டத்தில் 20 வயது முதல் 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு முதற்கட்ட தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வயதுப் பிரிவுக்குட்பட்ட 28 ஆயிரத்து 482 பேர் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளனர்.

அவர்களுக்கு நேற்று திங்கட்கிழமை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், தருமபுரம் மத்திய கல்லூரி, முழங்காவில் ஆதார மருத்துவமனை, பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நடைபெற்றன.

இன்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், உருத்திரபுரம் பிரதேச மருத்துவமனை, அக்கராயன் மகா வித்தியாலயம், இராமநாதபுரம் மகா வித்தியாலயம், முழங்காவில் ஆதார மருத்துவமனை, தருமபுரம் மத்திய கல்லூரி, பளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (எ-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசுக்குள் மீண்டும் குழப்பம்!

## ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் அதிரடிகாட்டவுள்ள 11 பங்காளிகள்

**கொழும்பு, செப். 21**

**கெரவலபிட்டிய மின் உற்பத்தி நிலைய விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் பேச்சு நடத்துவதற்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி யில் அங்கம் வகிக்கும் 11 கட்சிகள் தீர்மானித்துள்ளன.**

கெரவலபிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதற்கு நிதி அமைச்சால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு பங்காளிக்கட்சிகள் இன்னும் பச்சைக்கொடி காட்டவில்லை. எனினும், இதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தநிலையில் ஆளுங்கூட்டணியில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, எமது மக்கள் சக்தி, லங்கா சமசமாஜக்கட்சி ஆகியன இலங்கை கம்யூனிஸ் கட்சி அலுவலகத்தில் நேற்று முக்கித்துவமிக்க சந்திப்பொன்றை நடத்தியிருந்தன.

அமைச்சர்களான விமல்வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ வித்தாரண, அத்துரலிய ரத்தன தேரர், இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர உள்ளிட்டவர்கள் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இந்தச்சந்திப்பின்போது மின் உற்பத்தி நிலைய விவகாரம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் அவரை சந்தித்து இது சம்பந்தமாக பேச்சு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மற்றும் இதர கட்சிகளின் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடுவதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கெரவலபிட்டிய மின் உற்பத்தி நிலையத்தை அமெரிக்க நிறுவனத்திடம் வழங்குவதற்கு பங்காளிக்கட்சிகள் எதிர்ப்பா என்பது தொடர்பில் அந்தக்கட்சிகளின் தலைவர்கள் பகிரங்கமாக அறிவிக்கவில்லை. எமது நடவடிக்கை என்னவென்பதை பொறுத்திருந்து பாருங்கள் என்று குறிப்பிட்டனர். அதுமட்டுமல்ல கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்துக்கு நடந்த கதியே இதற்கு நடைபெறும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார். (த44)

## தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்

*அதிபர் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 21

"அதிபர் ஆசிரியர் தொழிற்சங்க முன்னணியின் கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்கும் வரைக்கும் எமது தொழிற்சங்கப் போராட்டம் தொடரும். அரசின் மிரட்டல்களுக்கு நாம் ஒருபோதும் அடிபணியமாட்டோம்."

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாம் தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பித்து 71 நாள்களாகின்றன. எந்த மாற்றமுமின்றி தொழிற்சங்கப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது. கடந்த ஜூலை மாதம் 12ஆம் திகதி தீர்மானித்து அது தொடர்பில் அறிவிப்பை விடுத்து நிகழ்தகை கற்பித்தலிலிருந்து விலகினோம்.

அதேபோன்று ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பிக்காது இருந்தால், அந்தப் பரீட்சைகளுக்கான கடமைகளில் ஈடுபடுவதற்கு விண்ணப்பிக்காது இருத்தல், விடைத்தாள் திருத்தும் பணிகளுக்கு விண்ணப்பிக்காது இருத்தல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்களை எடுத்தோம்.

இவ்வாறு எடுக்கப்பட்ட அனைத்து தீர்மானங்களும் எவ்வித மாற்றங்களுமின்றி முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

எனினும், கடந்த வாரம் அதிபர்கள் சங்கம் என்று தங்களை அடையாளப் படுத்திக்கொண்ட குழுவொன்று, முதல் முறையாக விண்ணப்பிப்பதற்குத் தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனவே, ஆட்சியாளர்களின் தேவைக்காகக் கருத்துரைப்பவர்களின் கருத்துகளுக்கு செவிமடுக்காதீர்கள்"என்றார். (த-22)

## பூஸா சிறைச்சாலையில் 28 கைதிகளுக்குத் தொற்று

கொழும்பு, செப். 21

பூஸா சிறைச்சாலையில் மேலும் 28 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

குறித்த சிறைச்சாலையில் 38 கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 28 கைதிகளுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தொற்றாளர்களுடன் தென் மாகாணத்தில் சிறைச்சாலைத் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 640 ஆக உயர்வடைந்துள்ளது. (த-22)

*அரியாலைக் கொலை*

## இருவருக்கும் விளக்கமறியல்



யாழ்ப்பாணம், செப். 21

அரியாலை பூம்புகார் பகுதியில் குடும்பத்தலைவர் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட குடும்பப் பெண்ணும் அவருடன் தொடர்பைப் பேணினார் என்று கூறப்படும் நபரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்தவரும் பூம்புகாரில் வசித்து வருபவருமான துரைராசா செல்வக்குமார் (வயது32) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே கடந்த சனிக்கிழமை உயிரிழந்தார்.

அவர் துருவு பலகையால் கடுமையாகத் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கொல்லப்பட்டவரின் மனைவியான 28 வயதுடைய பெண் மற்றும் அவருடன் தொடர்பை வைத்திருந்தார் என்று கூறப்படும் 28 வயதுடைய ஆண் ஒருவரும் யாழ்ப்பாணம் குற்றப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, கொல்லப்பட்டவரின் மனைவியுடன் தொடர்பைப் பேணினார் என்று கூறப்படும் நபருக்கும் கொலையுடன் தொடர்புள்ளமை ஆரம்ப விசாரணையில் கண்டறியப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதனை முதலாவது சந்தேக நபரான கொல்லப்பட்டவரின் மனைவியும் தனது வாக்குமூலத்தில் ஏற்றுக்கொண்டிருந்தார். எனினும், பின்னர் தனக்கும் இரண்டாவது சந்தேக நபருக்கும் தொடர்புள்ளமை உண்மை, ஆனால் கொலையை தான் மட்டுமே செய்தேன் என்று தெரிவித்தார்.

பின்னர் இரண்டாவது சந்தேக நபர் காலால் தனது கணவனின் கழுத்தை பிடித்து வைத்திருந்தபோது தான் துருவப்பலகையால் தாக்கினேன் என்று கூறியுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கனகராயன்குளம் பகுதி

## கிராமஅலுவலர்கள் இருவருக்குத் தொற்று

வவுனியா, செப். 21

வவுனியா கனகராயன்குளம் தெற்கு மற்றும் ஊஞ்சல்கட்டி பிரிவு கிராம அலுவலர்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த கிராம அலுவலர்கள் காய்ச்சல் காரணமாக துரித அன்டிஜென் பரிசோதனை மேற்கொண்டனர். அதன் போதே தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (த-110)

## வவுனியாவிலும் சிமெந்துக்கு தட்டுப்பாடு

வவுனியா, செப். 21


வவுனியாவில் சிமெந்துக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

நாட்டில் ஊரடங்குச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், கட்டுமானப் பணிகளை முன்னெடுக்க முடியும் என்று அரசு அறிவித்திருந்தது.

எனினும், கட்டுமானப்பணிகளை முன்னெடுப்பதற்கான சிமெந்துக்கு வவுனியாவில் திடீரெனத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அமைந்துள்ள கட்டுமானப்பொருள்கள் விற்பனை செய்யும் வியாபார நிலையங்களுக்கு சிமெந்தைக் கொள்வனவுசெய்வதற்காக செல்லும் பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-110)

## குடும்பப்பெண் சடலமாக மீட்பு



முல்லைத்தீவு, செப். 21

முல்லைத்தீவு மல்லாவிப் பிரதேசத்துக்கு உட்பட்ட வடகாடு கொல்லவிளாங்குளம் பகுதியில், இரண்டு பிள்ளைகளின் தாயார் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக நேற்று மீட்கப்பட்டார்.

ஆடைத்தொழில்சாலையில் பணியாற்றிவரும் 31 வயதுடைய அவர், கணவனைப் பிரிந்து இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்துவந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


சடலம் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மல்லாவிப் பொலிஸார் தெரிவித்தனர். (த-19)

அரசியல் கைதிகள் துன்புறுத்தப்பட்டமை

# மன்னிப்புக் கோரினார் நீதியமைச்சர் அலி சப்ரி



கொழும்பு, செப். 21
அநுராதபுரம் மற்றும் வெலிக்கடைச் சிறைச் சாலைகளில் இடம் பெற்ற சம்பவங்களுக் காக, சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் பகிரங்க மாக மன்னிப்புக் கோரி யுள்ளார் நீதி அமைச் சர் அலி சப்ரி.
சிறைச்சாலைகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவத்தையடுத்து, ஜனாதிபதியைத் தொடர்பு கொண்டு லொஹான் ரத்வத்தவை சிறைச்சாலைகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து விலக்குமாறு நாமே கோரினோம்.
அதற்கமையவே அமைச்சுப் பதவியில் இருந்து அவரை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்படி யான சம்பவங்கள் இடம்பெற்றிருக்கக்கூடாது. அவற்றை அனுமதிக்கவும் முடியாது.
எனது அமைச்சின் கீழ் வருகின்ற இராஜாங்க அமைச் சர் ஒருவர் இவ்வாறு செயற்பட்டுள்ளமை என்னையும் அசௌகரியத்துக்கு உட்படுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



# நாடாளுமன்றம் இன்று கூடுகிறது

## சிறைச்சாலை விவகாரம் தொடர்பில் விவாதங்கள்?

கொழும்பு, செப். 21
அநுராதபுரம் சிறைச்சாலை விவகாரம் தொடர் பில், எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றில் கேள் விக்கணைகளைத் தொடுக்கவுள்ளன.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமை யில் கூடவுள்ளது. பிரதான சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் முற்பகல் 11 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்வி களுக்கான நேரம் ஒதுக்கப்பட் டுள்ளது.
முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4.30 வரை மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல், துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 5 கட்டளைகள், விசேட வியாபாரப் பண்ட அறவீட் டுச் சட்டத்தின் கீழான 6 கட்டளை கள், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான 3 ஒழுங்கு விதிகள், வெளிநாட்டு செலாவ ணிச் சட்டத்தின் கீழான கட்டளை மற்றும் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத் தின் கீழான ஒழுங்கு விதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.
அதேவேளை, மத்திய வங்கி ஆளுநரின் நியமனம், வலுச் சக்தி திட்டம் அமெரிக்காவிடம் ஒப்படைப்பு உட்பட சமகால அர சியல் நிலைவரங்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகள் சபையில் கேள்வி களை எழுப்பவுள்ளன. குறிப்பாக அநுராதபுரம் சிறைச்சாலைச் சம்பவம் தொடர்பில் பல தரப்பி னரும் கேள்விகளை எழுப்ப வுள்ளனர்.
இதனைத் தொடர்ந்து பிற்பகல் 4.30 மணி முதல் 4.50 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத் தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.
4.50 மணி முதல் 5.30 மணி வரை ஆளும் கட்சியால் கொண் டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் நடைபெறும். நாளை புதன் கிழமை பாவனையாளர் அலு வல்கள் அதிகார சபை (திருத் தச்) சட்ட வரைவு (இரண்டாவது வாசிப்பு) மற்றும் தாவர விலங் கினப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் என் பன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. (ம-4,44)

# சாவகச்சேரியில் இருவர் இறப்பு!

சாவகச்சேரி, செப். 21
சாவகச்சேரி மருத்துவமனை யில் நேற்றுமுன்தினம் இரு கொரோனா உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. மந்துவி லைச் சேர்ந்த சாவகச்சேரி மருத்துவமனையின் பணியா ளரும், கெற்பேலியைச் சேர்ந்த மூதாட்டியுமே இவ்வாறு உயிரி ழந்தனர்.
கொரோனாத் தொற்று ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத் துவமனை கொரோனா விடுதி யில் சேர்க்கப்பட்ட நிலையில் இவர்கள் இருவரும் உயிரிழந் தனர். இதன்படி தென்மராட்சி பிரதேசத்தில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை 27ஆக அதிகரித் துள்ளது. (ஐ-9)

# அதிக விலைக்கு பொருள்கள் விற்றால் 100,000ரூபா தண்டம்

*நாடாளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றப்படும்*

கொழும்பு, செப். 21
அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்பவர்க ளுக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கும் தீர்மானம் நாடாளுமன்றில் அறிவிக்கப்படவுள்ளது.
பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் (திருத்தச்) சட்டவரைவின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் இந்தத் தீர்மானம் அறிவிக்கப்படவுள்ளது.
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை (திருத்தச்) சட்டவரைவின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தை நாளை நடத்துவதற்கு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத் தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.
அதற்கமைவாக அந்தத் திருத்தத்தை கூட்டுறவு சேவை கள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன முன்வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)



# ஆசிரியர்களுக்கு மேலதிக கொடுப்பனவு

கொழும்பு, செப். 21
ஆசிரியர்களுக்கு மாதந்தோறும் மேலதிகமாக 5 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்குவ தற்கான வர்த்தமானி வெளியிடப் பட்டுள்ளது என்று கல்வி அமைச் சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.
அதற்கமைய, செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் இணைய வழிக் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு மாத்திரம் இந்த மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் அவர் தெரி வித்துள்ளார். (ம-4)

# குடிதண்ணீருக்குத் தவிக்கும் அல்லிப்பளை கிராம மக்கள்

கிளிநொச்சி, செப். 21
பளை, அல்லிப்பளைக் கிராம மக்கள் நீண்ட காலமாக குடிதண்ணீர் பிரச் சினையை எதிர்கொண்டு வருகின்ற னர் என்று சுட்டிக்காட்டப்படுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தின், பச்சி லைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட அல்லிப்பளைக் கிராமம், கடற்கரையை அண்டிய கிராமமாகும்.
அந்தக் கிராமத்தில் தற்போது மக்கள் மீள்குடியமர்ந்துள்ள நிலையில், குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிர மங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கிராமத்தில் சில குடிதண்ணீர் கிணறு கள் காணப்பட்டாலும் சிலவற்றில் தண்ணீர் மஞ்சள் நிறமாக இருக்கின் றது. ஏனைய கிணறுகளில் நீர் உவர்த்தன்மையுடன் காணப்படு கின்றது.
ஆரம்பத்தில் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் பிரதேச சபைகள் போன்றவை குடிதண்ணீர் வழங்கின என்றும், தற்போது குடி தண்ணீர் வழங்கப்படுவதில்லை என்றும் கிராம மக்கள் தெரிவித்த னர். நீர்வழங்கல் சபை குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குவதற் கான நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளது. அவற்றை விரைவுபடுத்தி, விரைவாகக் குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். (எ-6)

# மது உற்பத்தியில் சில அமைச்சர்கள்?

*அநுர தகவல்*

கொழும்பு, செப். 21
மதுபானம் உற்பத்தி செய்யும் தொழிற்சா லைகளின் உரிமையாளர்களாக சில அமைச்சர்கள் இருக்கின்றனர். அதே போன்று மதுபான விற்பனை நிலையங்க ளின் உரிமையாளர்களாக சில நாடாளு மன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். இவர் களின் வருமானத்துக்காகவே 'பார்கள்' திறக்கப்பட்டிருக்கும் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரி வித்துள்ளார்.
ஜே.வி.பியின் தலைமையகத்தில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டில் 'சட்டம்' என்பது இல்லை. இருந்த ஒரே சட்டம் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டமாகும். தற்போது அந்தச் சட்டமும் இல்லாமல் போயுள்ளது. ஆரம்பத்தில் கடைகளில் ஒரு கதவே திறந்திருந்தது. தற்போது ஆறு கதவு கள் திறந்துள்ளன. பொது முடக்கத்தைக்கூட ஆளுந்தரப்பு தனக்கு ஏற்றவகையில் பயன் படுத்திக் கொள்கின்றது.
மதுபானசாலைகளைத் திறப்பதற்கு அனு மதி வழங்கியது யாரென்று தெரியவில்லை யாம். மதுபான உற்பத்திச் சாலைகளின் உரிமையாளர்களாக சில அமைச்சர்கள் இருக்கின்றனர். மதுபானம் விற்பனை நிலை யங்களின் உரிமையாளர்களாக நாடாளு மன்ற உறுப்பினர்கள் சிலர் இருக்கின்றனர். எனவே, பார்கள் மூடப்பட்டுள்ளதால் அவர் களின் வருமானம் இல்லாமல் போயுள்ளது. அதேபோன்று அரசுக்குக் கிடைக்கும் வரு மானமும் குறைவடைந்துள்ளது. எனவே, இவ்விரு தரப்புகளும் இணைந்தே பார்க ளைத் திறக்கும் முடிவுகளை எடுத்திருக்கும். என்றார். (ம்-4,44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கூவவேண்டாம், செய்யுங்கள்!

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அங்கு வைத்து கருணைக்கடல் போல, பல்வேறு கருத்துக்களை முன்வைத்திருக்கிறார். தமிழ் மக்கள் தரப்பில் நீண்டகாலமாக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பாக, கண்டும் காணாது வாய்மூடி மௌனமாக இருக்கும் ஜனாதிபதி, ஐ.நா. சபைக்குச் சென்று அங்கு அவை பற்றி பிரஸ்தாபித்திருப்பது வேடிக்கையானது.

ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்ரஸைச் சந்தித்துக் கலந்துரையாடிய கோத்தாபய ராஜபக்ச, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பாகவும், தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பாகவும் "மனமுருகி" கருத்துக்களை வெளியிட்டுள்ளார். உள்ளகப் பொறிமுறை ஒன்றின் கீழ் தீர்வுகாண புலம்பெயர் தமிழர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

போரின் பின்னர் இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசுகள் பிரதானமாக ராஜபக்சவினர் இறுதிப் போரில் நடந்தவற்றுக்கான பொறுப்புக்கூறலில் இருந்து தப்பவே முயற்சிக்கின்றனர். ஐக்கிய நாடுகள் சபையிலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டபோது, அவற்றிலிருந்து தப்பித்துக்கொள்ள வாக்குறுதிகளை இலங்கை அரசு அள்ளி வழங்கியது.

ஆனால் அவை எவையும் இதுவரை முற்றுமுழுதாக நிறைவேற்றப்படவில்லை. ஐக்கிய நாடுகள் சபையும் அதைக் கண்டும் காணாத போக்கிலேயே இருக்கின்றது.

தற்போதும் கோத்தாபய அர்சாங்கமும் அந்த வழியையே பின்பற்றுகின்றது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஐ.நாவில் கூறுபவற்றுக்கும், இலங்கையில் நடப்பவற்றுக்கும் கிஞ்சித்தும் சம்பந்தமில்லை. தற்போதும் தமிழ் மக்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அவர்களின் பூர்வீக வாழிடங்கள் பறிக்கப்பட்டு பௌத்த மயமாக்கப்படுகின்றன. தங்கள் பேரினவாதச் சிந்தனையில் இருந்து அரசுகள், அதிகாரத்தில் இருப்பவர்கள் மீளவில்லை.

தமிழ் மக்களின் மனங்களில் நம்பிக்கையை ஏற்படுத்தாது, சர்வதேசத்தின் காதுகளில் பூச்சுற்றிக் கொண்டிருப்பதால் எந்தப் பயனும் கிட்டப்போவதில்லை. வெளிநாடுகளுக்குச் சென்று அங்கிருந்து தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுப்பதை விடவும், முதலில் ராஜபக்ச அரசு நாட்டில் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளை நிறுத்த வேண்டும். தமிழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம், தமிழ் மக்களின் பூர்வீக இடங்கள் பறிக்கப்பட்டு பௌத்தமயமாக்கப்படும் விவகாரம் என்பவற்றில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

இவற்றைச் செய்யாது நாடு நாடாகச் சென்று கூவி எதுவும் நடந்துவிடப் போவதில்லை. சர்வதேசமும் தன் நலனுக்கு அப்பால் எதையும் செய்துவிடப் போவதுமில்லை. உண்மையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட வேண்டும் என்ற உளப்பூர்வமான சிந்தனை இருக்குமானால், அரசு அதை நோக்கி முதலடியை எடுத்து வைக்க வேண்டும். அதுவே நாட்டின் சுபீட்சத்துக்கு தேவையானது.




# பி.சி.ஆர்.முடிவு வருவதற்கு முன் வெளிநாடு பறந்த தொற்றாளர்!

## வவுனியாவில் சம்பவம்

**வவுனியா, பெப். 21**

**வவுனியாவில் இருந்து வெளிநாடு செல்வதற்காக மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 5 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில், தொற்றாளர்கள் முடிவு வருவதற்கு முன்னரே வெளிநாடு சென்றுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

வவுனியா, தவசிகுளம் பகுதியில் திருமண நிகழ்வு ஒன்றுக்காக வெளிநாட்டில் இருந்து 6 பேர் வருகை தந்திருந்தனர். அவர்கள் மீளவும் வெளிநாடு செல்வதற்காக யாழ்ப்பாணத்தில் பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுத்திருந்தனர். அவர்களது பி.சி. ஆர். முடிவுகள் நேற்றுமுன்தினம் இரவு வெளியாகிய நிலையில் குறித்த 6 பேரில் 5 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து, சுகாதாரப் பிரிவினர் குறித்த 5 பேரையும் தனிமைப்படுத்த சென்றபோது அவர்கள் வெளிநாடு சென்று விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த நபர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கு சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், குறித்த தொற்றாளர்கள், தொற்றுடன் எவ்வாறு வெளிநாடு சென்றார்கள் என்பது குறித்தும் கவனம் செலுத்தியுள்ளனர். (ஐ-18)

# விடத்தல் தீவில் வீடுபுகுந்து வன்முறைக் கும்பல் அடாவடி

மன்னார், செப். 21


மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விடத்தல் தீவு, 5ஆம் வட்டாரத்தில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கும்பல், வீட்டிலிருந்தவர்களைக் கடுமையாகத் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் நடந்துள்ளது. இந்தத் தாக்குதலில் அந்த வீட்டின் உரிமையாளரான அன்ரனி ஜோசப் (வயது44) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

15 பேர் கொண்ட கும்பல் மதுபோதையில் வீட்டுக்குள் நுழைந்து தாக்கியது என்று கூறப்படுகின்றது. வீட்டில் இருந்த 18 வயதான இதய நோயுடைய யுவதி ஒருவரும், 15 வயதான மாணவி ஒருவரும் தாக்கப்பட்டுள்ளனர். வீட்டில் இருந்த ஏனையோருக்கும் கடும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. வீட்டிலிருந்த பொருள்களும் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

படுகாயமடைந்த நபர் பள்ளமடு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து மன்னார் மருத்துவமனைக்கும், அதன் பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கும் மாற்றப்பட்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த யுவதியும், மாணவியும் பள்ளமடு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவை சமாளிக்க அமெரிக்காவுக்கு கப்பம்

## ஐ.ம.சக்தி குற்றச்சாட்டு

**கொழும்பு, செப். 21**

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அரசு முயற்சிக்கின்றது. அதனால் அமெரிக்காவுக்கு கப்பம் வழங்க முயற்சிக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவா விவகாரம் தொடர்பில் தெளிவானதொரு கொள்கை இருக்க வேண்டும். ஆனால் இந்த அரசிடம் அதற்கான வேலைத்திட்டம் இல்லை. அமெரிக்க ஜனாதிபதியான ஜோ பைடனுக்குக் கூட 'நீ உனது வேலையை பார்' என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கொலம்பகே எச்சரிக்கை விடுத்தார். ஆனால் இன்று என்ன நடக்கின்றது?

வெளிவிவகார அமைச்சரே மாற்றப்பட்டுள்ளார். அமெரிக்காவுக்கான தூதுவராக மஹிந்த சமரசிங்கவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதேபோன்று இலங்கையிலுள்ள வளங்களையும், வலு சக்தியையும் அமெரிக்காவுக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் தற்போது தேசப்பற்றாளர்கள் எங்கிருக்கின்றனர் என்று தெரியவில்லை.

இவ்வாறு கப்பம் வழங்கி ஜெனிவா நெருக்கடியில் இருந்து மீள முடியாது.

நடுநிலையான பலமானதொரு வெளிவிவகாரக் கொள்கை அவசியம்.

சமத்துவம் முக்கியம். இங்கே அரசியல் பழிவாங்கல்களைச் செய்துவிட்டு, சர்வதேச மட்டத்தில் மட்டும் ஒற்றுமையை எதிர்பார்க்க முடியாது- என்றார். (ம-4,44)

# அரசுக்கு ஆதரவளித்தோர் டுபாய்க்கு அவசர பயணம்

கொழும்பு, செப். 21

அரசுக்கு ஆதரவளித்துவரும் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் அவசரமாக டுபாய் சென்றுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் டுபாய் செல்லவுள்ளனர். இவர்களில் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் இராஜாங்க அமைச்சர் ஒருவரும் உள்ளடங்குகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் அனைவரும் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் மூலம் நாடாளுமன்றுக்குத் தெரிவுசெய்யப்பட்டதுடன், பின்னர் அரசுக்கு ஆதரவளித்து வருபவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# பாதுகாப்பற்ற குழிக்குள் வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, செப். 21

வீதியின் பாதுகாப்பற்ற கட்டுமான குழிக்குள் வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் பேருவளை நகரில் நடந்துள்ளது.

குறித்த இடத்தில் நகரசபையால் சுமார் ஒரு மாத காலமாக கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் வீதி நிர்மாணம் குறித்து அந்த இடத்தில் எந்த அறிவிப்புப் பலகையும் அமைக்கப்படவில்லை.

சம்பவத்தன்று இரண்டு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் வேகமாகப் பயணித்துள்ளனர். வேகக்கட்டுப்பாட்டை இழந்து ரயில் கடவைக்கு அருகிலுள்ள கட்டுமானத் தளத்தில் கம்பிகள் மீது இருவரும் வீழ்ந்துள்ளனர்.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பேருவளை, மாகலகந்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் கைது செய்யப்பட்டுள்ளார். பேருவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-4)

# பெரமுனவுக்குள் வருகிறது பிரிவு

கொழும்பு, செப். 21

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கீழ் போட்டியிட்ட சில கட்சிகள், எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை வலுப்படுத்துமாறு, முக்கிய கட்சிகள் மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் ஆலோசனை வழங்கியுள்ளன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு மாதங்களுக்கு முன்னர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் உள்ள முக்கிய கட்சிகளின் தலைவர்களின் பங்கேற்புடன் சிறப்புக் கலந்துரையாடல் நடைபெற்றது.

அதில் இந்த ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயற்குழுக் கூட்டம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ம-4)


# போலிக் கடவுச்சீட்டுடன் இளைஞன் ஒருவர் கைது

கொழும்பு, செப். 21

போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இத்தாலி செல்ல முயன்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் மாரவிலப் பகுதியைச் சேர்ந்த 24 வயதானவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரிடமிருந்து போலியான கடவுச்சீட்டு மற்றும் இத்தாலி குடியுரிமை விசா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-4)

# 20 ரயில் பெட்டிகளை அனுப்பியது இந்தியா



கொழும்பு, செப். 21

இலங்கையில் ரயில் சேவை உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கான 20 ரயில் பெட்டிகள் அடங்கிய தொகுதி, கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்திய அரசால் வழங்கப்படும் 318 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவியின் கீழ், ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கப்படவுள்ள 160 ரயில் பெட்டிகளில் ஒரு தொகுதியே இவ்வாறு வந்தடைந்துள்ளது.

இந்தத் திட்டத்தில் கடந்த மார்ச் மாதம் முதலாவது தொகுதி ரயில் பெட்டிகள் இலங்கைக்கு வந்தடைந்தன. அவற்றை சேவையில் ஈடுபடுத்துவதற்கு முன்னதாக பரீட்சார்த்த பயணங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



அதேவேளை இந்தக் கடனுதவியின் கீழ் இலங்கை ரயில்வே திணைக்களத்துக்கு குளிரூட்டப்பட்ட வசதிகளுடனான டீசல் ரயில்கள் இரண்டை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் 13 பெட்டிகளடங்கிய முதலாவது குளிரூட்டப்பட்ட ரயில் இந்தியாவிலிருந்து அனுப்பப்படுவதற்கு தயார் நிலையில் உள்ளது.

குறித்த ரயிலை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கான கப்பலை இலங்கை அரசு பரிந்துரைக்கும் வரை காத்திருக்கின்றது.

அத்துடன் இந்தக் கடனுதவித் திட்டத்தின் கீழ் மாஹோ முதல் ஓமந்தை வரையிலான ரயில் பாதை புனரமைப்பு, மாஹோ முதல் அநுராதபுரம் வரையிலான சமிக்ஞை வலையமைப்புத் திட்டம், பொல்காவலை முதல் குருநாகல் வரையிலான இரட்டை ரயில் பாதைத் திட்டம் உள்ளிட்ட திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதுவரையில் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான அபிவிருத்தி உதவித் திட்டங்கள் இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன என்று இந்திய[illegible] தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ்ப்பாண முதியவர்கள் தடுப்பூசி பெற பின்னடிப்பு

**கொழும்பு, செப். 21**

**நாட்டில் 60 வயதுக்கு மேற்பட்ட ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர், கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளவில்லை. அவர்களில் அதிகளவானோர் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கள உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட 21 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளவில்லை.

கொழும்பு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 900 பேரும், கண்டி மாவட்டத்தில் 7 ஆயிரம் பேரும் இதுவரை கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவில்லை.

அதேவேளை அம்பாறை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

தடுப்பூசியேற்றும் நடவடிக்கை தொடர்பில் பரவும் பொய்யான விடயங்களை நம்பி, சிலர் தடுப்பூசியை நிராகரித்துள்ளனர் என்றும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-4)

# கொடிய வைரஸ்க்கள் நாட்டுக்குள் நுழைவு

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 21

வெளிநாடுகளிலிருந்து பல கொடிய வைரஸ்க்கள் நாட்டுக்குள் நுழைந்துள்ளன. எங்கள் நாட்டின் ஜனாதிபதி, நிதி அமைச்சர் என சகல வைரஸ்க்களும் வெளிநாடுகளிலிருந்தே வந்துள்ளன. இந்த வைரஸ்க்களிலிருந்து எமது நாட்டை விடுவிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்கள் சார்பாக சுகாதார ஊழியர்களுக்கும், படைப்பிரிவினருக்கும் எங்கள் மரியாதையை செலுத்துகிறோம். இந்த முறை ஒரு பெரிய வைரஸ் நாட்டுக்குள் நுழைந்துள்ளது.

இந்த வைரஸ் வெளிநாட்டிலிருந்தே வந்துள்ளது. அந்த வைரஸ் தான் நாட்டின் தலைமை. கொரோனா வைரஸுடன் இன்னொரு வைரஸும் பரவி வருகின்றது. உலகெங்கிலும் உள்ள மக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்ற தடுப்பூசி போட்டனர். ஆனால் எமது அரசு தங்களைக் காப்பாற்ற தடுப்பூசி வழங்கியது. தடுப்பூசி போடுவதில் ஏற்பட்ட நீடித்த தாமதத்தால் நாடு சீரழிந்துள்ளது.

மத்திய வங்கியிலிருந்து வந்துள்ள வைரஸ், கமிஷன்களிலிருந்து வந்துள்ள வைரஸ், யானைக் கடத்தலில் இருந்து வந்துள்ள வைரஸ், உரங்களிலிருந்து வந்துள்ள வைரஸ் ஆகியவற்றை நாங்கள் கிட்டிய எதிர்காலத்தில் முன்வைக்கிறோம்.

நவம்பர் மாதத்துக்குள் தடுப்பூசிகள் கொடுத்து முடித்தமைக்கு ஒரு பெரிய விழாவை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டில் பல பிரச்சினைகள் இருக்கும்போது மக்களை முடக்கத்தில் விட்டு விட்டு தலைமைகள் வெளிநாடுகளுக்குப் பயணிக்கின்றனர். நாட்டின் தலைவர் தனது சொந்த ஊருக்கே சென்றுள்ளார். ஆனால் நாட்டில் சீனி இல்லை, மா இல்லை, மருந்துகள் இல்லை. குறைந்தபட்சம் அடிப்படைத் தேவையை நிறைவேற்ற கழிப்பறைகளும் இல்லை. இதுதான் இன்று எமது நிலைமை- என்றார். (ம-4)

# இலங்கைக்கு பாராட்டு

கொழும்பு, செப். 21

இலங்கையின் மொத்த சனத்தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டோர் கொரோனாத் தடுப்பூசி பெற்றுள்ளமைக்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கடந்த சனிக்கிழமை உலக சுகாதார அமைப்பால் வெளியிட்ட அறிக்கையில் பாராட்டுத் தெரிவித்துள்ளது. இலங்கையின் சனத்தொகையில் 50 வீதமானவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசிகள் முழுமையாக ஏற்றப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தது. (ம-4)

# மாந்தை மேற்கு பிரதேசத்துக்கு புதிய செயலர் நியமனம்



மன்னார்,செப்.21

மன்னார் மாந்தை மேற்கு பிரதேசத்தின் புதிய செயலராக டெனிசியஸ் கனியூட் அரவிந்தராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தனது கடமையை கடந்த வாரம் பொறுப்பேற்றார்.

இவர் மன்னார், வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உதவித் தேர்தல் ஆணையாளராகவும் கடமையாற்றினார். (ஐ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுப்பூசி ஏற்றலை விரைவுபடுத்தி

# பாடசாலைகளை மீளத் திறவுங்கள்

## அரசிடம் ஐ.ம.ச. கோரிக்கை

**கொழும்பு, செப். 21**

**மாணவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றலை விரைவுபடுத்தி, பாடசாலைகளை மீளத்திறக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகளில் உயர்தரம், சாதாரண தரம் கற்கும் மாணவர்களுக்கு முக்கியத்துவமளித்து பைஸர் தடுப்பூசியைச் செலுத்த வேண்டும்.

இந்த வருடம் நடைபெறவிருந்த உயர்தரப் பரீட்சை காலந்தாழ்த்தப்பட்டுள்ளது. பரீட்சைக்குரிய திகதி இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை.

எனவே பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் தடுப்பூசிகளை செலுத்தி அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வுகளை வழங்கி, அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் பாடசாலைகளைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாணவர்களின் வாழ்க்கையோடு விளையாடுவதை நிறுத்திவிட்டு, விரைவாக அவர்களுக்கு தடுப்பூசியைச் செலுத்த வேண்டும். -என்றார். (ம-4)

## இருண்ட யுகத்துக்குள் இலங்கையின் கல்வி!

கொழும்பு, செப். 21

இலங்கையின் முழு கல்வித் துறையும் வரலாற்றில் இருண்ட யுகத்துக்கு முகங்கொடுத்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை ஆட்சி செய்யும் அரசும், அதன் தலைவர்களும் கல்வி நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க எவ்வித சாதகமான திட்டங்களையும் முன்னெடுப்பதாகத் தெரியவில்லை. கல்வி நெருக்கடியின் தற்போதைய மற்றும் எதிர்கால விளைவுகளின் தீவிரம் மற்றும் பேரழிவை இலங்கையின் ஆட்சியாளர்கள் கண்டு கொள்ளாமல் இருப்பது அருவருக்கத்தக்க விடயம் -என்றார். (ம-4)



## 73,000 பைஸர் தடுப்பூசிகள் இலங்கைக்கு

கொழும்பு, செப். 21

இலங்கைக்கு மேலும் 73 ஆயிரம் பைஸர் தடுப்பூசிகள் நேற்றுக் கிடைக்கப் பெற்றுள்ளன.

நெதர்லாந்தில் இருந்து கட்டார் ஊடாக கொண்டுவரப்பட்ட தடுப்பூசிகள் நேற்று அதிகாலை 2.10 மணிக்கு நாட்டை வந்தடைந்துள்ளன.

கட்டார் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் இத் தடுப்பூசிகள் கொண்டு வரப்பட்டன. (ம-4)

## நிமோனியாவுக்கான போலிமருந்து கடத்தல்

### மருந்து நிறுவனங்கள் எச்சரிக்கை

கொழும்பு, செப். 21

நிமோனியா நோயாளிகளுக்குப் பயன்படுத்தப்படும் விலை உயர்ந்த Toeillizumab என்ற மருந்து, போலியாக தயாரிக்கப்பட்டு சந்தைக்கு விடப்பட்டுள்ளது என்று மருந்து நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த மருந்தும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதனால் இதனைப் போலியாகத் தயாரித்து, உலகளவில் சட்டவிரோதமாக கடத்தி வருகின்றனர் என்று பெரியளவில் மருந்துகளை ஏற்றுமதி செய்யும் மருந்து நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அதேவேளை தேசிய மருந்து ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவின் அனுமதியின்றி குறித்த மருந்து இலங்கைக்கும் கொண்டுவரப்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்து பல நாடுகளில் தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதலுடன் பொது மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படுன்றது. அத்துடன் பல்வேறு தனியார் துறை நிறுவனங்களால் பல்வேறு வடிவங்களிலும் இறக்குமதி செய்யப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-4)

## எவர் விமர்சித்தாலும் முயற்சியை விடோம்

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 21

எந்த விமர்சனங்கள் வந்தாலும், கொரோனாத் தொற்றுநோயைத் தடுக்க சுகாதாரத் துறை தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கண்டி தேசிய மருத்துவமனையின் கொவிட் சிகிச்சைப் பிரிவுக்கு, கண்டி முஸ்லிம் சமூகம் 2.5 மில்லியன் ரூபா நிதியை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் வழங்கியது. அந்த நிகழ்வில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். விமர்சனங்களுக்கான சிறந்த பதில் வெற்றியாகும். நாங்கள் ஒரு குழுவாகப் பணியாற்றினால் இந்தச் சவாலை சமாளிப்பது கடினமான காரியமாக இருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## சீனாவின் தடுப்பூசிகள் இலங்கைக்கு தாராளம்

கொழும்பு, செப். 21

சீனாவின் கொரோனாத் தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைத்த வண்ணம் உள்ளன.

இலங்கைக்கு மேலும் 4 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் நேற்றுமுன்தினமும் கிடைத்துள்ளன.

இதவேளை, இலங்கையில் தடுப்பூசி ஏற்றும் வேலைத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக சீனா அரசு ஒரு மில்லியன் சினோவெக் தடுப்பூசிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதரகம் இதனை உறுதி செய்துள்ளது. (ம-4)

## மற்றுமொரு மருத்துவர் கொரோனாவால் சாவு!

கொழும்பு, செப். 21

இலங்கையில் மற்றுமொரு மருத்துவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார். குருநாகல் மருத்துவமனையில் பணியாற்றிய மருத்துவர் சுதத் பண்டார என்பவரே கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

இவர் அதே மருத்துவமனையில் கொரோனாத் தொற்றாளர்களுக்கான சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றி வந்துள்ளார்.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் கட்டுகஸ்தோட்டை மருத்துவமனையில் பணியாற்றிய மருத்துவர் [illegible] தொற்றுக்கு [illegible] என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4)

அடுத்த வருடமும்

## வாகன இறக்குமதியை கட்டுப்படுத்தத் திட்டம்



**கொழும்பு, செப். 21**

**வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டத்தை அடுத்தவருடமும் தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தை முன்வைப்பதற்கு இன்னமும் இரண்டு மாதங்களே உள்ளன. இதனால் வரவு செலவுத் திட்டம் தொடர்பான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கமைய நீர்ப்பாசனம், நெடுஞ்சாலைகள், விவசாயம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தி 'உற்பத்திப் பொருளாதாரம்' என்ற தலைப்பில் பொருளாதார இலக்குகளை அடையும் வகையில் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

அது தவிர, அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலும், இந்த ஆண்டைப் போன்று முடிந்தவரை இறக்குமதிகளை குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதில் வாகனங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக பெரிய அளவிலான காணிகளை மேம்படுத்தும் திட்டங்களுக்காக தனியார் துறையை ஊக்குவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்துவதே வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகக் காணப்படும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எபோலா அழிந்தது!

கின்சஸா, செப். 21

உலகில் இருந்து எபோலா வைரஸ் முற்றிலும் அழிக்கப்பட்டது என்ற மகிழ்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார் எபோலா வைரஸை முதன்முதல் கண்டறிந்தவரான காங்கோ விஞ்ஞானி ஜேக்கஸ் முயும்பே.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

40 ஆண்டுகளாக நான் எபோலா என்ற உயிர்க்கொல்லி வைரஸுக்கு எதிரான போராட்டத்தில் இருக்கிறேன். இன்று என்னால், ஒரு விடயத்தை ஆணித்தரமாகக் கூறமுடியும். எபோலா வைரஸ் தோற்றுவிட்டது. எபோலாவைக் கட்டுப்படுத்தலாம். பாதிப்பு ஏற்பட்டால் நிச்சயமாகக் குணப்படுத்தலாம். காங்கோ மக்களிலேயே இன்று நான்தான் மகிழ்ச்சியானவன் என்று கூறுவேன் என்றார்.


ஜேக்கஸ் முயும்பேவும், அமெரிக்காவைச் சேர்ந்த உயிரி ஆராய்ச்சியாளர் நேன்சி சல்லிவனும் சேர்ந்து எபாங்கா என்ற அன்டிபாடி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். மனித உடலில் உள்ள இந்த அன்டிபாடி எபோலா உடலுக்குச் செல்வதைத் தடுக்கிறது. ஒருவேளை வைரஸ் மனித உடலில் நுழைந்துவிட்டாலும் கூட உயிரிழப்புகளைக் கட்டுப்படுத்துகிறது.

### கண்டுபிடிக்கப்பட்டது எப்படி?

1976ஆம் ஆண்டில் எபோலா எனும் நதிக்கரையில் உள்ள யம்புக்கு எனும் குக்கிராமத்தில் ஜேக்கஸ் தொற்றுநோய் ஆராய்ச்சியாளராக இருந்தார்.

அப்போது ஒரு கன்னியாஸ்திரிக்கு வினோதமான நோய் ஏற்பட்டிருப்பதாக ஜேக்கஸ் அழைக்கப்பட்டார். அவரது உடலில் இருந்து குருதி மாதிரிகளை ஜேக்கஸ் சேகரித்தார். அந்த மாதிரிகளைப் பரிசோதித்தபோது அது எபோலா வைரஸ் என்பது உறுதியானது. எபோலா நதிக்கரையோர கிராமத்தில் கண்டறியப்பட்டதால் அந்த வைரஸுக்கு அப்பெயர் வழங்கப்பட்டது. 1976க்குப் பின்னர் எபோலாவால் பெரிய பாதிப்பு ஏற்படவில்லை. ஆனால், 1995ஆம் ஆண்டில் கிக்விட் எனும் பகுதியில் எபோலா மீண்டும் தலைதூக்கியது.

அப்போது எபோலா பாதித்தும் குணமடைந்த சிலரின் குருதியை நோய் பாதித்த ஒரே குருதி வகையறா கொண்டவர்களுக்கு ஏற்றி சிகிச்சையளிக்கும் முயற்சியை ஜேக்கஸ் மேற்கொண்டார். அவரது முயற்சிக்குப் பயன் கிடைத்தது. அதன் தொடர்ச்சியாகத்தான் இந்தக் கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது. (ம)



## தலிபானுடன் நட்பு ரஷ்யா பரிசீலனை

### அதிபர் புடின் தகவல்

மொஸ்கோ, செப். 21

ஆப்கானிஸ்தானில் ஆட்சியமைத்துள்ள தலிபான்களுடன் ரஷ்யா நட்புறவைப் பேணுவதற்குப் பரீசிலனை செய்து வருகின்றது என்று ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்தார்.

ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பொதுக்கூட்டம் தஜிகிஸ்தானில் நடைபெற்று வருகின்றது. இந்தக் கூட்டத்தில் காணொலி வழியாக உரையாற்றுகையிலேயே புடின் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆப்கானிஸ்தானின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளையும், சொத்து முடக்கத்தையும் உலக நாடுகள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். தலிபான்களுடன் நட்புறவைப் பேணும் வகையில் ரஷ்யா தனது பரிசீலனைகளை முன்னெடுத்து வருகின்றது. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் - என்றார்.

உலக நாடுகளுடன் நட்புறவை விரும்புகின்றோம் என்று தலிபான்கள் அண்மையில் அறிவித்திருந்தனர். எனினும் தலிபான்களின் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள பலர் ஐக்கிய நாடுகள் சபையால் தேடப்படும் பயங்கரவாதிகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆப்கானில் குண்டுவெடிப்பு: தலிபான்கள் உயிரிழப்பு!

காபூல், செப். 21

ஆப்கானிஸ்தானின் ஜலாலாபாத் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் தலிபான்கள் சிலர் கொல்லப்பட்டனர்.

தொடர்ச்சியாக மூன்று இடங்களில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றபோதிலும் எந்த உத்தியோகபூர்வத் தகவலும் வெளிவரவில்லை. அதேநேரம் தலிபான்களுக்கும் கிளர்ச்சிக் குழுவுக்கும் இடையில் தற்போது கடும் போர் பாஞ்ஷிர் பகுதியில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)





பல்மாவில் உள்ள எரிமலையொன்று வெடித்துச் சிதற ஆரம்பித்துள்ளது. கணிசமான அழிவுகளை ஏற்படுத்தும் வகையில் அந்த எரிமலை கொதிநிலை அடைந்துள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. எரிமலையை சுற்றிலும் ஆபத்தான வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பல்லாயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். (ம)

## இரண்டு குழந்தைகளைப் பெற்றால் சீனாவில் பல்வேறு ஊக்குவிப்புகள்

பீஜிங், செப். 21

சீனாவில் இரண்டு குழந்தைகளைப் பெற்றுக்கொண்டால் பல்வேறு மானியங்கள் வழங்கப்படும் என்று கன்சு மாகாணம் அறிவித்துள்ளது.

சீனாவில் மூன்று குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கடந்த மாதம் அனுமதி வழங்கப்பட்டது. இந்த நிலையிலேயே இரண்டு குழந்தைகளைப் பெறுவதை 'அறிவிக்கப்படாத' கட்டாயமாக்கும் வகையில் சீன அரசு பல்வேறு நகர்வுகளைக் கைக்கொண்டு வருகின்றது. (ம)



## சூச்சிக்கு எதிரான விசாரணை ஒக். 1

மியான்மரின் முன்னாள் அரச தலைவரும் அரசின் தலைமை ஆலோசகருமான ஆங் சான் சூச்சிக்கு எதிரான விசாரணைகள் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்று மியான்மரின் இராணுவம் அறிவித்துள்ளது.

மியான்மர் இராணுவத்தால் சூச்சி, அதிபர் வின் மியான்ட் தலைமையிலான ஆட்சி கவிழ்க்கப்பட்டு இராணுவ ஆட்சி அறிவிக்கப்பட்டு ஓர் ஆண்டு ஆகின்றது. சூச்சி மீது இராணுவத்தால் பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. தேசத்துரோக வழக்கு உட்பட 4 வழக்குகள் சூச்சி மீது சுமத்தப்பட்டுள்ளன. இவை நிரூபிக்கப்பட்டால் ஒவ்வொன்றுக்கும் தலா 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்க சட்டத்தில் இடமுண்டு. அதேநேரம் வின் மியான்ட் மீதும் சில குற்றச்சாட்டுக்களைச் சுமத்த இராணுவம் தயாராகி வருகின்றது என்றும் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் சரத் வீரசேகர ஹிட்லராவதற்கு முயற்சி

## ஆளுங்கட்சி எம்.பி. சூளுரை

கொழும்பு, செப். 21

**சட்டம், ஒழுங்குடன் தொடர்புபட்ட அமைச்சரான சரத் வீரசேகர ஹிட்லராவதற்கு முயற்சிக்கின்றார். அதனால்தான் போராட்டங்களில் ஈடுபடுபவர்களைத் தீவிரவாதிகளாகவும், உண்மையைக் கதைப்பவர்களின் வாயை மூடுவதற்கும் முற்படுகின்றார் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ஜகத்குமார தெரிவித்துள்ளார்.**

அமைச்சர்களான காமினி லொக்குகே, சரத் வீரசேகர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார ஆகியோருக்கிடையிலான சொற்போர் உச்சம் தொட்டுள்ளது.

இவ்விரு அமைச்சர்களின் செயற்பாடுகளுக்கு கடும் எதிர்ப்பை தெரிவித்து, பாதுக்க பிரதேச அபிவிருத்திக்குழு தலைமைப்பதவியை விட்டு ஜகத்குமார விலகியுள்ளார்.

ஊடங்களின் முன்னால் தம்மை கடுமையாக விமர்சித்த ஜகத்குமாரவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இவ்விரு அமைச்சர்களும் பெரமுனவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஜகத்குமார தெரிவிக்கையில்,

ஒழுக்காற்று விசாரணைக்கு அஞ்சுபவர்களாக இருந்திருந்தால் இந்த அரசை உருவாக்கி இருக்க மாட்டோம்.

மஹிந்த ராஜபக்ச தோல்வியடைந்து வீட்டுக்குச் சென்ற பின்னர், அவரை மீண்டும் அரசியல் மேடை நோக்கி முதலில் அழைத்து வந்த நபர் நான். ஆனால் மேற்படி அமைச்சர்கள் இருவரும் தலைமறைவாகியிருந்தனர்.

வரலாறு தெரியாதவர்கள்தான் ஒழுக்காற்று நடவடிக்கை பற்றி உளறுகின்றனர். சாகர செயலாளர்கூட தற்போது வந்தவர்தான். எந்தவொரு விசாரணையையும் எதிர்கொள்ள நான் தயார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுப் பதவியை சரத் வீரசேகர வகித்திருக்காவிட்டால், ஆசிரியர்களின் போராட்டம் இந்தக் கட்டத்துக்கு வந்திருக்காது.

போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களை பலவந்தமாக கைது செய்து தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியதாலேயே போராட்டம் தீவிரமடைந்தது.

சரத் வீரசேகர ஹிட்லராவதற்கு முயற்சிக்கின்றார். போராட்டத்தில் ஈடுபடுபவர்களைத் தீவிரவாதிகளை ஒடுக்குவது போல் ஒடுக்குகின்றார். உண்மையைப் பேசுபவர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை என்ற போர்வையில் வாயடைக்க வைப்பதற்கு முற்படுகின்றார்.

இருவரும் இணைந்து ஊடக சந்திப்புகளை நடத்தட்டும். நானும் பதிலடி வழங்கத் தயார்.

பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசமும் அச்சுறுத்துகின்றார். அதற்கு நான் அஞ்சமாட்டேன்.

-என்றார். (ம-4-44)

# ஒன்லைனில் மது விற்பனை

## விரைவில் அனுமதி

கொழும்பு, செப். 21

மதுபானத்தை ஒன்லைனில் விற்பனை செய்வதற்கு, மதுவரித் திணைக்களத்தால் விரைவில் அனுமதி வழங்கப்படவுள்ளது.

அதற்கான பொறிமுறை விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.ஜே.குணசிறி தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக் காலத்தில், மதுபானங்களைக் கொள்வனவு செய்வதற்காக மதுபானசாலைகளுக்கு முன்பாக ஒன்றுகூடுபவர்களை சில நேரங்களில் கட்டுப்படுத்த முடியாமல் போகின்றது. இதனால் புதிதாகக் கொரோனாக் கொத்தணிகள் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

தற்போதைய நிலையில் கறுப்புச் சந்தைகளில் சாராயத்தின் விலை பெருமளவில் அதிகரித்துள்ளது. நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் சுற்றிவளைப்புக்களை மேற்கொள்வதும் சிரமமானது.

எனவே மதுபானத்தை ஒன்லைனில் விற்பனை செய்வதற்கான பொறிமுறை விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# துப்பாக்கிச் சூட்டில் சிறுவன் உயிரிழப்பு

துப்பாக்கிச் சூட்டில் 14 வயதுச் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் வீரகெட்டியப் பகுதியில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

உறவினர்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து, இந்த துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய நபர் அந்தப் பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். அவரைக் கைது செய்ய பொலிஸார் தேடுதல் மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன், சம்பவம் தொடர்பில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# நாடு திரும்பினார் பிரதமர் மஹிந்த

கொழும்பு, செப். 21

இத்தாலிக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட குழுவினர் நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ளனர்.

ஜி-20 சர்வமத மற்றும் கலாசார மாநாட்டில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பிரதமரின் செயலாளர் காமினி செனரத் உள்ளிட்ட தூதுக் குழுவினர் பிரதமருடன் கடந்த வாரம் இத்தாலிக்குச் சென்றிருந்தனர்.

இவர்களே தமது பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ளனர். (4)

# நாட்டை மாற்ற எம்மால் முடியும்

## ஐ.தே.க. நம்பிக்கை

கொழும்பு, செப். 21

தற்போதைய அரசுக்கு ஆதரவு வழங்கியவர்களையும், எதிர்க்கட்சிக்கு ஆதரவு வழங்கியவர்களையும் ஒன்றிணைத்து அரசியலில் மாற்றம் ஏற்படுத்தவும், இலங்கையை அபிருத்தி அடைந்த நாடாக மாற்றவும் எம்மால் முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இணையவழிக் கலந்துரையாடலொன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசியல் நிலைமையை மக்கள் அடியோடு வெறுக்கின்றனர். உண்மையான மற்றும் நிலையான கொள்கையுடைய அரசை தோற்றுவிக்க எண்ணுகின்றனர். இதன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாக மாற்றமடைந்துள்ளது. பொருளாதாரம், சுகாதாரம், ஜனநாயகம் மற்றும் சுற்றுச் சூழல் உள்ளிட்ட பிரதான விடயங்களைக் கொண்ட குறுகிய காலத்திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி அறிமுகப்படுத்தியுள்ளது.

பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை குறுகிய காலத்திட்டத்துக்கு அமைவாக சரிசெய்தால் நாட்டை 2 வருடத்துக்குள் முன்னேற்றமடையச் செய்ய முடியும். -என்றார். (ம-4)


மணி விழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்






எமது நகராட்சி மன்றத்தில் 01.10.2001 இல் இருந்து 20.09.2021 வரை சேவையாற்றி இன்று (21.09.2021) செவ்வாய்க்கிழமை ஓய்வு பெறும் மணி விழா நாயகன் உத்தியோகத்தர்

திரு. மயில்வாகனம் சதானந்தராசா

அவர்களின் 60 ஆவது அகவைதனில் அவரது சேவையினை கௌரவித்து எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்களது எதிர்காலம் இறையருளுடன் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: நலன்புரிச் சங்கம்
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனிக்கு மீண்டும் தட்டுப்பாடு வரும்?

கொழும்பு, செப். 21
சீனி இறக்குமதிக்கு அனுமதி அளிக்காவிட்டால், விரைவில் சீனிக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்று அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.
கடந்த வருட இறுதிப் பகுதியில் சீனிக்கான இறக்குமதி வரி 25 சதவீதம் குறைக்கப்பட்டு, தேவைக்கும் அதிகமான அளவு சீனி நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அதன் விளைவாக சீனி இறக்குமதிக்கு அரசு தடை விதித்திருந்தது. தற்போது நாட்டில் கையிருப்பில் இருக்கும் சீனி எதிர்வரும் ஒன்றரை மாதங்களுக்கே போதுமானதாக உள்ளது. அத்துடன் நாட்டுக்கு ஒரு மாதத்துக்கான சீனித் தேவைப்பாடு 45 ஆயிரம் மெற்றிக் தொன்னாகும். தற்போது கைவசம் இருப்பது சுமார் 75 ஆயிரம் மெற்றிக் தொன்வரையாகும். இந்தநிலையில் சீனி இறக்குமதிக்கு அனுமதி வழங்காவிட்டால் எதிர்காலத்தில் சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-4)

# சுற்றுச்சூழலுக்கு தீங்கு செய்யோம்

## நெடுஞ்சாலை அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, செப். 21
**சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் எந்த முடிவையும் அரசு எடுக்காது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் மற்றும் எதிர்கால சந்ததியினருக்குப் பயனளிக்கும் வகையில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்**

என்று நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
சௌபாக்கிய நோக்கு கொள்கைப் பிரகடனத்தின்படி வீதிகளின் இருபுறமும் ஒரு மில்லியன் மரக்கன்றுகளை நடுவதற்கு முதலில் முடிவு செய்திருந்தோம். ஆனால் நாங்கள் இப்போது அதை இரண்டு மில்லியனாக அதிகரித்துள்ளோம். பசுமைக் கருத்திட்டத்தின் கீழ் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் மர நடுகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இது போன்ற அபிவிருத்திகளைக் கண்டும் காணாதது போன்று இருப்பவர்கள் எதிர்க்கட்சியினர்.
லங்காகம வீதி அமைக்கப்படும் போது சிங்கராஜவில் உள்ள அனைத்து மரங்களும் வெட்டப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டது.
ஆனால் இன்று அந்த வீதியின் வேலை முடிந்துவிட்டது. அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் எந்த முடிவையும் எங்கள் அரசு எடுக்காது.
சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு பயனளிக்கும் வகையில் இந்த அபிவிருத்திப் பணிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். அதனால் இன்று எதிர்க்கட்சிகள் கூறியவை அனைத்தும் முற்றிலும் பொய்யாகிவிட்டன. அவ்வப்போது ஏதாவது கருத்தை உருவாக்கி சர்ச்சையை ஏற்படுத்துவதுதான் எதிர்க்கட்சிகளின் முக்கிய பங்காக இருக்கின்றது. -என்றார். (ம-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### வாள்...

பது ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெரு பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய அவர்ரை பொலிஸ் தடுப்புக் காவலில் 5 நாள்கள் தடுத்துவைத்து விசாரணை மேற்கொள்ள யாழ்ப்பாணம் நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது. 19 வயதுடைய ஏனைய மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் காரில் பயணித்துக் கொண்டிருந்தபோது, யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு தலைமைப் பொலிஸ் அதிகாரி சி.ஐ.பிரான்சிஸ் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே அவர்களிடமிருந்து 2.94 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் மற்றும் வாள் என்பன மீட்கப்பட்டன. அதனையடுத்து குறித்த காரில் பயணித்த நால்வரும் கைதுசெய்யப்பட்டனர். காரும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.
கைதுசெய்யப்பட்ட பிரதான சந்தேகநபர், வாள்வெட்டுக்குழு ஒன்றுடன் தொடர்புடையவர் என்பதும் அவர் கொழும்பிலுள்ள போதைப்பொருள் விற்பனை மாபியாக்களுடன் தொடர்புடையவர் என்பதும் அவர்கள் மூலமாக ஒரு கிலோ போதைப்பொருளைப் பெற்று விற்பனைசெய்துள்ளார் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளன என்றும் தெரிவித்த பொலிஸார், அதனையடுத்து அவரை 5 நாள்கள் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தனர். (து-26)

### கொரோனாவின் ...

மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்வைத்துள்ளது.
கொரோனாவின் நான்காம் அலையின் தாக்கம் இலங்கையில் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. அதேநேரம், ஐந்தாம் அலை இன்னும் சில மாதங்களில் தாக்கக்கூடும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.
எனவே, முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது அலைகளின் தீவிரம் குறைந்த பிறகு அலட்சியமாக இருந்ததே நான்காம் அலையில் ஏற்பட்ட பேரிழப்புகளுக்கு முக்கிய காரணமாக அமைந்தது.
அந்தவகையில், அடுத்துவரும் ஐந்தாம் அலையில் இருந்து தற்காத்துக் கொள்வதற்கான முக்கிய சில பரிந்துரைகளை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளியிட்டுள்ளது.
அவையாவன:
01) தேசிய ஆலோசனைக் குழுவின் வழிகாட்டுதல்கள் மற்றும் ஒப்புதலின்படி நாட்டின் சனத் தொகையில் 70 சதவீதத்துக்கும் அதிகமானவர்களுக்கு முழுமையான தடுப்பூசி மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி போடுதல்.
02) தொற்று நோய்களுக்கான தேசிய ஆலோசனை குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டு இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் பெற்றவர்களுக்கு நவம்பர் தொடக்கத்தில் இருந்து மூன்றாவது பூஸ்டர் டோஸை செலுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.
03) சுகாதார வழிகாட்டுதல்களின்படி புதிய வாழ்க்கை முறைக்கு மக்களை உள்வாங்கல்.
04) தடுப்பூசி போடப்பட்ட போதிலும் வைரஸால் பாதிக்கப்பட்டு நேர்மறை அறிகுறியற்ற நபர்களை அடையாளம் காண இலவசமாக வழங்கக்கூடிய, எளிமையான ஒரு கொரோனா பரிசோதனை முறையொன்றை அறிமுகம் செய்தல்.
05) சமூகத்தில் பரவிவரும் கொரோனாக் கொத்தணிகளை அடையாளம் காண, அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக எழுமாறாக மாதிரிப் பரிசோதனைகளை முன்னெடுத்தல்.
06) விஞ்ஞான மற்றும் சீரான முறையில் மரபணு சோதனையை நடத்துவதன் மூலம் சாத்தியமான புதிய திரிபுகளை அடையாளம் கண்டு, ஆரம்பத்தில் இருந்தே சமூகத்தில் பரவுவதை தடுக்க உத்திகளை செயல்படுத்தல். (து -22)

### தாய்...

உயிரிழந்தார். அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. எனினும், குழந்தைக்குத் தொற்றில்லை. குழந்தை மருத்துவமனை விடுதியில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
முல்லைத்தீவு உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய தாயாரே நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். (து-19)

## யாழில் நான்கு பேர் கொரோனாவால் சாவு

யாழ்ப்பாணம், செப். 21
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை பெற்றுவந்தவர்களில் நால்வர் நேற்று உயிரிழந்தனர்.
இதேவேளை, போதனா மருத்துவமனையில், குழந்தை பிரசவித்த தாய்க்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவருடைய குழந்தைக்குத் தொற்று இல்லை. எனினும், குழந்தை உயிரிழந்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது. சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தாய் ஒருவரின் குழந்தையே உயிரிழந்தது. (து)

## பொலன்னறுவையில் தண்ணீருக்கு நெருக்கடி

பொலன்னறுவை மாவட்டத்தில் 6 பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் சுமார் 30 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர்.
இவர்கள் தற்போது பவுசர்கள் மூலம் விநியோகிக்கப்படும் குடிதண்ணீரையே பயன்படுத்துகின்றனர்.
மாவட்டத்தில் வெலிகந்த, திம்புலாகல, ஹிங்குரகொட, தமன்கடுவ, லங்காபுர மற்றும் மெதிரிகிரிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட பேரிடர் மேலாண்மை பிரிவின் உதவி இயக்குநர் உபுல் நாணயக்கார தெரிவித்துள்ளார். அங்கு 11 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் 4 ஆயிரத்து 659 குடும்பங்கள் குடிதண்ணீர் பற்றாக்குறையால் அவதிப்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**இடபம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்குக் குடும்பத்துடன் குல தெய்வப் பிரார்த்தனையை நிறை வேற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**மிதுனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயல்படவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**சிம்மம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவையை நிறைவேற்றி மகிழும் வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். திடீர் செலவுகள் ஏற்படும்.

**துலாம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம்.

**விருச்சிகம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும்.

**தனுசு:** உற்சாகமான நாள். மன உறுதியுடன் செயல்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். தெய்வப்பணிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு உண்டாகும்:

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. ஆதாயம் உண்டாகும்.

**மீனம்:** தெய்வஅனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

# அதிரடி அக்சனுடன் அடுத்தவாரம் வலிமை டீசர்



அஜித் நடிப்பில் தற்போது உருவாகி உள்ள படம் வலிமை.


எச்.வினோத் இயக்கியுள்ள இப்படத்துக்கு யுவன் ஷங்கர்ராஜா இசையமைத்துள்ளார். இப்படத்தில் அஜித்துக்கு ஜோடியாக பாலிவுட் நடிகை ஹூமா குரேஷியும், வில்லனாக தெலுங்கு நடிகர் கார்த்திகேயா வும் நடித்துள்ளனர்.

போனி கபூர் தயாரித்துள்ள இந்தப் படத்துக்கு நீரவ் ஷா ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்து பின்னணி பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

கடந்த மாதம் இந்தப் படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் மோஷன் போஸ்டரை எந்தவித முன் அறிவிப்பும் இன்றி வெளியிட்ட படக்குழு, அதே பாணியில் வலிமை படத்தின் டீசரையும் விரைவில் வெளியிட உள்ளதாம். அதன்படி இந்தப் படத்தின் டீசர் அடுத்த வாரம் வெளியாக வாய்ப்புள்ளது என சமூக வலைதளங்களில் தகவல் பரவி வருகிறது.


மேலும் இந்த டீசர் அதிரடி அக்ஷன் காட்சிகள் நிறைந்ததாக இருக்கும் எனவும் கூறப்படுகிறது.









# மனம் செம்மையானால்.....

எம் ஆழ்மனதில் உலவித்திரியும் அத்தனையையும் நாம் அறிவதில்லை. ஆக, வெளிமனம் தோற்றுவிக்கும் மாயப் பீடைகளால் நாம் பீடிக்கப்பட்டிருக்கின்றோம். நாம் நாளாந்த வாழ்வியலில் சந்திக்கும் அம்சங்களை பற்றிய விம்பம் ஒன்றை எமக்குள் பதியச்செய்யும்போது நாமும் அதே வெளிப்பாடுகளை வெளிப்படுத்துகின்றோம்.

துயரமோ மனச்சோர்வோ திருப்தியற்ற நிலையோ எம்மை நெருங்கும்போது எம் மனதுக்குள் சாந்தமான நிலையை பொருத்திக்கொண்டு 'எம்மால் இயலும்... எம் இயலுமைகளை தாண்டி வேறொன்றும் பெரிதில்லை...' என்று மனதுக்குள் கூறிக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொருவருக்குள்ளும் ஒளிந்துகொண்டிருக்கும் ஆழ்மன ஆற்றல்களை வெளிக்கொண்டுவர முயலுங்கள். பிரச்சினைகள் நெருங்கும்போது தான் நம்மையும் மீறிய பிரபஞ்ச சக்திகளை பிரார்த்தனை செய்ய முயல்கின்றோம். ஆனால், பிறப்பிலிருந்தே எம்மோடு பயணிக்கும் எம் அக உள்ள சக்திகளை பற்றி அறிய மறுக்கின்றோம்.

உங்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வு உங்களிடமே தான் இருக்கின்றது. உங்களது எண்ணங்களின் விளைவே உங்கள் சூழ்நிலைகளாக இருக்கின்றன. எதிர்மறையாக பேசுவதும், எதிர்மறையாக சிந்திப்பதும் எதிர்மறையான விளைவுகளை தேடித்தரும்.

பிரச்சினைகளுக்கான தீர்வினை எட்டும் முன்பே நற்தீர்வை ஏற்றுக்கொள்ளுங்கள். வாழ்வின் அனைத்து பக்கங்களும் அனுபவங்களால் நிரம்பி வழிபவை. வாழ்தல் இனிதென்று உணர்ந்து உன்னத வாழ்வை உலகுக்கு காண்பிக்க முயல்வோம்!

## twitter

செங்காந்தள் @kumarfaculty

"உன்கிட்ட மட்டும்தான் சொல்லுகிறேன். வேறு யாருகிட்டவும் சொல்லிடாதே" என்பதே உலகின் முதல் ஸ்பீடு போஸ்ட்...!!!

T.RAMESH@

மனிதர்க்கு மனிதர்கள் மட்டுமே தேவை என்பது இரண்டு பருவத்தில் ஒன்று வாழத் தெரியாத இளம்பருவம் இன்னொன்று வாழ்ந்து முடித்த முதுமைப் பருவம்..

செங்காந்தள் @kumarfaculty

மரங்களை வெட்டுவது பூமிக்குச் செய்யும் 'பச்சை'த் துரோகம்...!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹெய்க்வாட், பிராவோ அசத்தலான ஆட்டம்!

## டோனி புகழாரம்

துபாய், செப். 21

மும்பைக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் பெற்ற வெற்றிக்கு, ருத்ராஜ் ஹெய்க்வாட் மற்றும் பிராவோ ஆகியோர் வழங்கிய மிகையான பங்களிப்புத்தான் காரணம் என்று சென்னை அணியின் தலைவரான டோனி புகழாரம் சூட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு கட்டத்தில் 4 இலக்குகளை இழந்து 30 ஓட்டங்களையே சேர்த்திருந்தோம். ஆனால், அதன் பின் விரும்பியவாறு கௌரவமான ஓட்டங்கள் கிடைத்தன. ஹெய்க்வாட், பிராவோ இருவரும் சேர்ந்து, நாங்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாக வழங்கிவிட்டார்கள். நாங்கள் 140 ஓட்டங்கள்தான் எதிர்பார்த்திருந்தோம். ஆனால், 160 ஓட்டங்களுக்கு அருகேசென்றது அற்புதமானது. ராயுடு காயமடைந்து சென்றதால் அவர் மீண்டும் துடுப்பெடுத்தாட முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால், நாங்கள் சூழலுக்கு ஏற்ப துடுப்பெடுத்தாடி பிரமாதமாக முடித்துள்ளோம்- என்றார். (ம)

## டோனிக்கு முன்னதாக களமிறங்க வேண்டும்! ஜடேஜாவுக்கு மஞ்ரேக்கர் ஆலோசனை

துபாய், செப். 21

டோனிக்கு முன்னதாக ஜடேஜா களமிறங்க வேண்டும். அப்போதுதான் அணியில் சமநிலைத்தன்மை இருக்கும் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் வீரரான சஞ்சய் மஞ்ரேக்கர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி துடுப்பாட்டத்தில் சிறிய மாற்றமொன்றைச் செய்ய வேண்டும். அந்த அணி ஜடேஜாவை டோனிக்கு முன்னதாக களமிறக்க வேண்டும். சாம் கரன் வந்தபின்னர் சென்னை அணியின் துடுப்பாட்ட வரிசை பலப்படும். அப்படியிருக்கையில் ஜடேஜா டோனிக்கு முன்னர் களமிறங்குவதில் எந்தச் சிக்கலும் இருக்காது - என்றார். (ம)

---

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற

அமரர்

**முத்தையா அருளையா**

பிறப்பு 31.01.1936 — இறப்பு 19.09.2021

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி,
கனிஷ்ட வித்தியாலயம், மல்லாகம்

---

## மணமகள் தேவை

1986 இல் பிறந்த யாழ் இந்து கௌரவ குடும்பம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த A/L படித்து தனியார் நிறுவனத்தில் வேலை புரியும் மணமகனுக்கு (7இல் செவ்வாய் அச்சுவினி நட்சத்திரம்) மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள்.

077 603 3947, 021 222 3198

---

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் சக ஆசிரியர்
திரு. ப.ரகுமார் அவர்களின்
அன்புத் தாயார்

திருமதி **வடிவாம்பாள் பரராசசிங்கம்**

அவர்கள் கடந்த (22.08.2021) அன்று இறைபதம் எய்தியமையையிட்டு அன்னாரது குடும்பத்தினரிற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நட்புறவுக்கழகம்
யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 06 . 10 . 1992 — மறைவு 08 . 08 . 2021



**கந்தசாமி கௌதமன்**

குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம்வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே!
இப்பாரினில் எம்மை பரிதவிக்க விட்டுச்
சென்றாலும் என்றும் விடி வெள்ளியாய்
வழிநடத்தும் எங்கள் மகனே!

இவரின் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

குடும்பத்தினர்

---

## ஆழ்ந்த அனுதாபங்கள்



எமது அன்புக்குரிய விஞ்ஞான
ஆசிரியர் திரு. ப.ரகுமார்
அவர்களின்பாசமிகு தாயார்

திருமதி **வடிவாம்பாள் பரராசசிங்கம்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

Kopay, Jaffna.

Former Students
Group Class - science

---

## கண்ணீர் அஞ்சலி



எமது நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வி
மைதிலி அருளையா அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் முத்தையா அருளையா**

19.09.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமான செய்தி அறிந்து மிகுந்த மனவேதனை அடைகின்றோம், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

பிரிவால் துயருறும்
நடனத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

---

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 09 . 1947 — உதிர்வு 20 . 09 . 2021



**தம்பு குணரத்தினம்**

மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு குணரத்தினம் நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு சின்னத்தங்கத்தின் புத்திரனும், காலஞ்சென்ற குணரத்தினம் புஸ்பராணியின் அன்புக் கணவரும், தனறூபன் (பிரான்ஸ்), பரதறூபனா (அமெரிக்கா), கிருஸ்ணறூபனா (லண்டன்), கஜறூபனா (பான் ஏசியா வங்கி), காலஞ்சென்ற செல்வறூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சஜித்தா, விமலன், ஜங்கரன் ஆகியோரின் மாமனாரும், அக்சனன், டிவிசானி, தேவர்ஷி ஆகியோரின் பேரனும், அமராவதி, விசாலாட்சி, மகேஸ்வரி, பராசக்தி, காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, சோதிப்பிள்ளை, செல்லம்மா, தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2021) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, முற்பகல் 9.30 மணியளவில் தகனக்கிரியைக்காக மாரீசன் கூடல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மகள் [illegible]
077 6569949

மாரீசன்கூடல்,
இளவாலை.

---

## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி பேபியன் அந்திரேசுப்பிள்ளை தி.கு**

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி பேபியன் அந்திரேசுப்பிள்ளை தி.கு (20.09.2021) திங்கட்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிப் பயணத் திருப்பலி (21.09.2021) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு பாஷையூர் திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்
மாகாணத் தலைவி.
121,பிரதான வீதி யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காணாமலா...

ஜனாதிபதிக்கும் ஐ.நா. பொதுச் செயலாளருக்கும் இடையிலான விசேட சந்திப்பு நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்குள் மிகவும் பலமான முறையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதே என்னுடைய இலக்கு. அதன்படி, போராட்டக்காரர்கள் மீது முன்னரைப் போன்று தடியடி, நீர்த்தாரைத் தாக்குதல் போன்றவற்றை நடத்த என்னுடைய ஆட்சியின்கீழ் ஒருபோதும் அனுமதியில்லை. போராட்டக்காரர்களுக்கென்றே என்னுடைய அலுவலகத்துக்கு முன்பாக தனி இடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டுக்குள் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக சிவில் அமைப்புகளுடன் இணைந்து செயற்படுகின்றேன்.

இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகள், நாட்டுக்குள்ளேயே உள்ளகப் பொறிமுறையினூடாகத் தீர்க்கப்பட வேண்டும். அதற்காக புலம்பெயர் தமிழர்களுடனான பேச்சுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

ஐக்கிய நாடுகள் சபையுடன் எப்போதும் மிக நெருக்கமாகப் பணியாற்றத் தயாரென மீண்டுமொருமுறை எடுத்துரைக்கின்றேன். நாட்டுக்குள் மீண்டும் பிரிவினைவாதம் ஏற்படப்போவதில்லை என்பதை என்னால் உறுதிப்படத் தெரிவிக்க முடியுமென்ற போதிலும், மதவாதத் தீவிரவாதம் தொடர்பில் அரசு என்ற ரீதியில் இலங்கை போன்று ஏனைய நாடுகளும் அவதானமாக இருக்க வேண்டும்." என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், 2019ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகத் தெரிவான ஜனாதிபதி, 30 வருடங்களாக நிலவிய போரை முடிவுக்குக் கொண்டுவந்ததன் பின்னர் ஏற்பட்ட இடைநிலைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்கல், காணிகளை மீளக் கையளித்தல் மற்றும் 2009ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்சவின் வழிகாட்டலின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட பெரும் அபிவிருத்திகள் மற்றும் வடக்கு மாகாண சபைக்கான உறுப்பினர்களை ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுப்பதற்காக ஏற்படுத்திக்கொடுத்த வாய்ப்பு தொடர்பிலும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

இதன்போது, "இனங்களுக்கிடையில் ஒற்றுமையைப் பலப்படுத்திக்கொண்டு முன்னோக்கி நகர்வதற்கான முழுமையான ஒத்துழைப்பை மிகவும் நேர்மறையான முறையில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு வழங்கும்" என்று, அதன் பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டரெஸ், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் தெரிவித்தார்.

ஐ.நா. தலைமையகத்துக்குப் பிரவேசித்த ஜனாதிபதியை வரவேற்ற குட்டரெஸ், சுமார் 30 ஆண்டுகள் நிலவிய போர் காரணமாக மிகவும் சிக்கலான நிலைமைக்கு விழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், இந்து சமுத்திர வலயத்தில் மாபெரும் சமூக மற்றும் பொருளாதாரப் பணிகளை நிறைவேற்றும் இலங்கையிடமிருந்து தொடர்ந்தும் அந்தப்பணியை எதிர்பார்க்கின்றேன் என்று எடுத்துரைத்தார். - என்று ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

### சட்ட...

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்த இளைஞர்களில் பலரை, நான் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் விடுவித்துள்ளேன். விடுவிக்க முடியாத ஏனையோர் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன." என்றும் ஜனாதிபதி அதன்போது தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் ஐ.நா. பொதுச் செயலாளருக்கும் இடையிலான விசேட சந்திப்பு நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டது. (த)

### கொரோனாச் ...

பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி உதயநகர் கிழக்கு பகுதியைச் சேர்ந்த முன்னாள் கிராம அலுவலர் ஒருவரின் வீட்டார் கொரோனாத் தொற்று இருக்கலாம் என்ற அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்து சுமார் 21 நாள்களின் பின்னர், குறித்த முன்னாள் கிராம அலுவலர் சுகவீனம் காரணமாக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபின்னர் கடந்த 16ஆம் திகதி உயிரிழந்துள்ளார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் இரவு குறித்த கிராமத்தில் அவருடைய இறுதி நிகழ்வுகள் அவரின் வீட்டில் நடைபெறும் என்று ஒலிபெருக்கி ஊடாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறுகோரி சமூக ஆர்வலர்களாலும் அரச உத்தியோகத்தர்களாலும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கொரோனா சடலத்தைத் தகனம் செய்வதற்காக வவுனியாவிலுள்ள பூந்தோட்டம் மயானத்துக்குக் கொண்டுசெல்லப்படுகின்றது என்று கூறப்பட்டு மருத்துவமனையிலிருந்து நேற்றுமுன்தினம் காலை 7 மணியளவில் வாகனத்தில் சடலம் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது. எனினும், அந்த வாகனம் வவுனியா செல்வதற்குப் பதிலாக கிளிநொச்சி உதயநகர் கிழக்கிலுள்ள, தொற்றால் உயிரிழந்த முன்னாள் கிராம அலுவலரின் வீட்டுக்குக் கொண்டுசெல்லப்பட்டு, பொதுமக்களின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருக்கின்றது. அஞ்சலி செலுத்த பொதுமக்களும் கூடியுள்ளனர்.

குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் அங்கிருந்து புறப்பட்ட வாகனம் மூலம் மீளவும் வவுனியாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இதுதவிர, கொரோனாத்தொற்றால் உயிரிழப்பவர்களை எரியூட்டும் பகுதிக்கு இறந்தவரின் நெருங்கிய உறவினர்கள் மூன்று அல்லது நான்கு பேர் மாத்திரமே செல்ல அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. அவர்கள்கூட தூரத்திலிருந்தே பார்க்க அனுமதிக்கப்படுகின்றனர்.

அதேபோல சடலத்தை எரியூட்டுபவர்கள்கூட முழுமையாக கொரோனாப் பரவலைத் தடுக்கும் வகையிலான ஆடைகளை அணிந்துகொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருப்பர். ஆனால் அஞ்சலி செலுத்த பங்குகொண்ட மக்கள் 'மாஸ்க்' த்விர வேறெந்தப் பாதுகாப்பு வழிவகைகளையும் கடைப்பிடிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவிர, குறித்த சம்பவம் தொடர்பில் அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கிய நபர்கள் அரச உயர் அதிகாரி உள்ளிட்ட தரப்பினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர் என்றும் குற்றம்சாட்டப்படுகின்றது. வடக்கிலுள்ள மருத்துவமனை ஒன்றின் பணிப்பாளரே இவற்றை முன்னின்று செயற்படுத்தினார் என்றும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இதுதவிர, உயிரிழந்தவரின் மைத்துநர்கள் மூவர் மருத்துவமனையில் மருத்துவர்களாகப் பணியாற்றிவருகின்றனர். அவர்களும் இதில் தொடர்புபட்டுள்ளனர் என்று குற்றம்சாட்டப்படுகின்றது.

கொரோனாவின் தொடர் தாக்கத்தால் அதிலிருந்து மீள்வதற்கு மக்களும் நாடும் கடும் சிரமப்பட்டுவரும் நிலையில் உயர் பதவியில் இருப்பவர்கள் இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் நடந்துகொள்கின்ற சம்பவங்கள் மக்கள் மத்தியில் மிகுந்த கவலையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்திவருகின்றன.

குறிப்பாக கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களைத் தகனத்துக்குக் கொண்டுசெல்கின்றபோது பொலிஸாரின் பாதுகாப்புடனேயே கொண்டு செல்லப்படுவது வழமை. அவ்வாறிருக்க, என்ன அடிப்படையில் பொலிஸார் சடலத்தை கிளிநொச்சிக்குக் கொண்டுசெல்ல அனுமதித்தனர் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்தச் சம்பவங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கேட்டபோது, "சடலத்தை வீடுள்ள பகுதிக்குக் கொண்டுசெல்லவோ அஞ்சலி செலுத்தவோ அனுமதிக்கமுடியாது என்று சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தியிருந்தேன். அதனையும் மீறி இவை நடந்துள்ளன. இவை தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது." என்று தெரிவித்தார். (த-6)

### தொற்று ...

அதன்படி நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 6 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

அதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் ஆயிரத்து 55 பேர் குணமடைந்துள்ளனர். அதற்கமைய இதுவரை கொரோ்னாத் தொற்றிலிருந்து 4 இலட்சத்து 33 ஆயிரத்து 93 பேர் குணமடைந்துள்ளனர். இதேவேளை, இலங்கையில் மேலும் 93 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்தச் சாவுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 218 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 93 பேரில் 45 ஆண்களும், 48 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இதில் ஆண் ஒருவர் 30 வயதுக்குட்பட்டவர். 12 ஆண்கள், 12 பெண்கள் என 24 பேர் 30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 68 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 32 ஆண்களும், 36 பெண்களும் அடங்குகின்றனர். (த-22)

### யாழ்....

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் பகுதியானது செப்ரெம்பர் 16,17,18 ஆம் திகதிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், தற்போதைய கொரோனா நிலைமையில், தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக ஒக்ரோபர் 7,8,9ஆம் திகதிகளில் நடத்துவதாகக்கூறிப் பிற்போடப்பட்டிருந்தது.

எனினும், அந்தத் திகதிகளில் மாணவர்களை நேரில் அழைத்து பட்டமளிப்பை நடத்துவதற்கு சுகாதார அமைச்சு அனுமதி மறுத்துள்ளது. அதனையடுத்து பட்டமளிப்பை, ஒக்ரோபர் 7ஆம் திகதி நிகழ்நிலையில் நடத்துவதற்குப் பல்கலைக்கழக நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் மாணவர்கள் மத்தியில் விருப்பமின்மை காணப்படுகின்றது. இது தொடர்பாக நாம் கடந்த 15ஆம் திகதி துணைவேந்தருக்குக் கடிதம் மூலம் தெரிவித்திருந்தோம். எனினும், துணைவேந்தரிடமிருந்து சாதகமான பதில் எமக்கு கிடைக்கவில்லை.

எனினும், நாடு முழுவதும் வழமைக்குத் திரும்பிய பின்னர் பட்டமளிப்பை நேரடியாக விழாவாக நடத்துவதற்கே மாணவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். எனவே, பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தாமல் நேரடியாக மாணவர்களை அழைத்து பட்டமளிப்பை விழாவாக நடத்தவேண்டும் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகத்தை கோருகின்றோம். என்றுள்ளது. (த)

### ஜனாதிபதி....

என்ற முழக்கத்துடன் நாடு கடந்த தமிழீழ அரசு ஏற்பாடு செய்துள்ள இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நாளை அமெரிக்க நேரப்பட்டி முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. பொதுமன்றின் முன் இடம்பெறவுள்ளது. தமிழர் தேசத்தின் மீதான இன அழிப்பு ஆக்கிரமிப்புப் போரின்போது இலங்கையின் பாதுகாப்புத்துறை செயலராக கோத்தாபய ராஜபக்ச இருந்துள்ளார். தவிர, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய இடத்திலும் இவர் இருக்கின்றார் என்று போராட்ட ஒருங்கிணைப்புக்குழு தெரிவித்துள்ளது. (த-22)

### அடாவடியில்...

மணிநேரத்தில் குறித்த குழுவினர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"பாசையூர் அந்தோனியார் கோவிலுக்குப் பின்புறமாகவுள்ள வீடொன்றுக்குள் நேற்றுப்பிற்பகல் 2.30 அளவில் புகுந்த 7 பேர் கொண்ட குழுவினர், பெறுமதியான பொருள்களை உடைத்து அடாவடியில் ஈடுபட்டு, வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்திவிட்டுத் தப்பிச்சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிடைத்த தவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் சம்பவ இடத்துக்குச்சென்று விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அதனடிப்படையில் நடத்தப்பட்ட தேடுதலில் 3 மோட்டார்சைக்கிள்களில் பயணித்த 7 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து வாள் ஒன்றும் இரண்டு பொல்லுகளும் கைப்பற்றப்பட்டன. பாசையூர், மணியந்தோட்டம் பகுதிகளைச் சேர்ந்த 22 வயதுக்கும் 27 வயதுக்கும் இடைப்பட்டவர்களே கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் 7 பேரும் சட்டநடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் பயணித்த 3 மோட்டார்சைக்கிள்கள் உள்ளிட்ட சான்றுப்பொருள்களும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 22 . 04 . 1939

மறைவு 22 . 08 . 2021



## அமரர் வடிவாம்பாள் பரராசசிங்கம்
(வடிவக்கா)

காலமெல்லாம் அரவணைத்து
அன்பு எனும் அமுதாட்டி
பாசமழை பொழிந்த எம் அன்னையே
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்டதேனோ
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
நல்லூர் முருகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்னையின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும், மரணச் சடங்கில் உறுதுணையாக நின்று செயற்பட்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இன்று (21.09.2021) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வில் அனைவரையும் அழைக்க முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

'சிவசக்திவாசா'
கட்டைப்பிராய்,
கோப்பாய் தெற்கு.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 11 . 12 . 1940

இறப்பு 20 . 09 . 2021



## Eng. கிட்ணசாமி சண்முகசுந்தரம்
(இளைப்பாறிய பிரதிப் பணிப்பாளர் நீர்ப்பாசனத் திணைக்களம் – கொழும்பு)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், புகையிரத நிலைய வீதி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொறியியலாளர் கிட்ணசாமி சண்முகசுந்தரம் அவர்கள் நேற்று (20.09.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்ணசாமி தையல்நாயகி தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான ஆனந்தகணேசன், பாக்கியலட்சுமி, ஆனந்தசுந்தரம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவராமலிங்கம், இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தகோகிலம் அவர்களின் பாசமிகு கணவரும், திருச்செல்வி (ஆசிரியை), திருமலர் (முகாமைத்துவ அலுவலர் - யாழ். மாவட்ட செயலகம்), திருக்குமரன் (சிரேஷ்ட விரிவுரையாளர் - வவுனியா பல்கலைக்கழகம்), திருவேணி (ஆசிரியை, யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வைத்திய கலாநிதி துஷ்யந்தன் (யாழ்ப்பாணம் - போதனா வைத்தியசாலை), கிருபாகரன் (ஆசிரியர் - நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி), தசாயினி, கிருஷ்ணமேனன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமனாரும், வைஷ்ணவி, பிரசாந்தன், பிரசன்னன், ஹரிசினி, ஹேமிதா, ஆரணி, ஆருத்ரன், அருணியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (22.09.2021) புதன்கிழமை கோம்பயன் மணல் இந்து மயானத்தில் மின் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

முருகன் துணை


கொக்குவில்
021 321 4692

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 03 . 1961

மறைவு 18 . 09 . 2021



## திரு. கதிர்காமத்தம்பி சண்முகவதனன்
(உடையார்), கருகம்பனை

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கதிர்காமத்தம்பி சண்முகவதனன் அவர்கள் கடந்த (18.09.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கதிர்காமத்தம்பி காலஞ்சென்ற திலகவதி தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் அன்னலட்சுமியின் அன்பு மருமகனும் வசந்தாதேவியின் அன்புக் கணவரும், ராகுலன், ராகவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகவசீகரி (யசோ), சண்முகவதனி (ரூபா), சண்முகவசீகரன் (சந்நிதியான் மோட்டோஸ், நெல்லியடி), பங்கஜம் (ஆசிரியை, யா/ நடேஸ்வரக் கல்லூரி), சண்முகானந்தன் (UK), சண்முகேஸ்வரி (UK) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சர்வானந்தன் (மருந்தாளர், ஆராதனா பார்மசி), ஸ்ரீலகுமார், விஜிதா (ஆசிரியை, யா/ புலோலி மெ.மி.த.க பாடசாலை), பாலகிருஸ்ணா, சாந்தி (UK), சபேசன் (UK) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிம்மகி (விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்), நிரோசனா (ஆசிரியை யா/ மகாஜனக் கல்லூரி), திவிகரா, கரிஸ்ணா, திருவேங்கதன், தாட்சாயினி, ரமணன், சாமுகி, சாயீசன், சாம்பவி ஆகியோரின் அன்பு மாமனாரும், டிலக்சனா, வித்தியா, தர்சிகா, கிருத்திகா, மகா ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (23.09.2021) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

யசோ - 077 967 2366, ரூபா 077 191 8985,
வசி - 076 199 2985, சியா - 077 079 0395

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 03 . 1941

மறைவு 17 . 09 . 2021



## காசிலிங்கம் இராணியம்மா

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் 65, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காசிலிங்கம் இராணியம்மா அவர்கள் (17.09.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற இராமலிங்கம் காசிலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற புவனேஸ்வரி, மகேஸ்வரி, இராசமணியின் சகோதரியும், பரமலிங்கம் (உதயன் - லண்டன்), உதயகுமாரி (திருநெல்வேலி), விஜிகௌரி (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியசீலன், மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமியாரும், கீர்த்தனா, மதுஷா, மபிந்தராஜ், வர்ஷா, அக்ஷயா, பிராஷாதன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2021) செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

65, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
(சீலன்) 077 314 5058

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆர்.சி.பி. அணியின்

# தலைமைப் பொறுப்பை உதறுகின்றார் கோலி

**பெங்களூர், செப். 21**

**நடப்பு வருட ஐ.பி.எல். தொடருக்குப் பின்னர் ஆர்.சி.பி. அணியின் தலைமைப் பொறுப்பில் இருந்து கோலி முழுவதுமாக விலகவுள்ளார். இறுதிவரை அவர் ஒரு வீரராக அணியில் தொடர்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**



ஆர்.சி.பி அணியின் தலைவராக இதுதான் எனது கடைசி சீசன். ஆனால் தொடர்ந்து ஆர்.சி.பி. அணியில் ஒரு வீரராக நான் எனது கடைசி ஐ.பி.எல். வரை விளையாடுவேன். அனைத்து ரசிகர்களுக்கும், என் மீது நம்பிக்கை வைத்து ஆதரவு அளித்த நிர்வாகத்தினருக்கும் நன்றி.

இதுதொடர்பாக அணி வீரர்களிடம் பேசியிருக்கிறேன், என்னுடைய பணிச்சுமை காரணமாக சமீபத்தில் ரி20 கேப்டன் பதவியிலிருந்தும் விலகினேன். இதுவும் என் மனதில் இருந்தது.

என்னுடைய முன்னோக்கிய நகர்வுகள் தெளிவாக இருக்க வேண்டும் என்பதை விரும்புகிறேன்.

எனது இந்த முடிவையும் நிர்வாகத்திடம் தெளிவுபடுத்தி, வீரராகத் தொடர்வேன் எனத் தெரிவித்து விட்டேன். இது என் பயணத்தில் சிறிய நிறுத்தம்தான் முடிவு அல்ல, பயணம் தொடரும்.

இந்த வாய்ப்பை வழங்கிய நிர்வாகம், பயிற்சியாளர்கள், ஊழியர்கள், வீரர்கள் அனைவருக்கும் நன்றி.

இது எளிதான முடிவல்ல. ஆனால், நன்கு சிந்தித்து எடுக்கப்பட்ட முடிவு. அணியின் நிர்வாகத்தின் நலனுக்காக எடுக்கப்பட்ட முடிவு - என்றார். (ம)

### கோல்களைத் தவறவிட்டமையால்

# ஆட்டத்தின் இடைநடுவே மெஸ்ஸி வெளியேற்றம்!

பரிஸ், செப். 21

லியோன் அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் மெஸ்ஸி இரண்டு கோல் வாய்ப்புக்களைத் தவறவிட்டதை அடுத்து அவர், ஆட்டத்தின் இடைப்பகுதியில் பயிற்சியாளரால் வெளியேற்றப்பட்டார்.

மெஸ்ஸி தன்னை வெளியில் அழைத்த முடிவுக்கு மைதானத்தில் வைத்து வெளிப்படையாகவே தனது அதிருப்தியைத் தெரிவித்தார். இதனால் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிக்குள் இனிவரும் நாள்களில் சிறு சலசலப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்று கருதப்படுகின்றது. (ம)



# கொல்கத்தாவிடம் ஆர்.சி.பி போராடாமல் சரணடைந்தது

## சொதப்பினார் கோலி



துபாய், செப். 21

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தாவிடம் ஆர்.சி.பி. அணி போராடாமலேயே சரணடைந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வனிந்து ஹசரங்க விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் இடம்பிடித்திருந்தார்.

விராட் கோலியை வெறும் 5 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் பிரதிப் கிருஷ்ணா. படிக்கல், சிக்கர் பாரட் இருவரும் இணைந்து ஓரளவு தாக்குப்பிடித்தனர். 'ப்ரீஹிட்'கள் கிடைத்தபோதும் அதை ஆர்.சி.பி. சரிவரப் பயன்படுத்தவில்லை. அணி 41 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் படிக்கல். அதன் பின்னர்தான் அதலபாதாளத்துக்குள் விழுந்தது ஆர்.சி.பி. கோல்டன் டக் முறையில் வெளியேற்றப்பட்டார் வில்லியர்ஸ். மக்ஸ்வெலை வெளியேற்றினார் வருண் சக்கரவர்த்தி. சச்சின் பேபி 17 பந்துகளில் 7 ஓட்டங்களை மட்டும்பெற்று டெஸ்ட் ஆட்டத்தை முன்னெடுத்தார். வனிந்து கோல்டன் டக். ஜெமிசன் 4 என்று தொடர்ச்சியாக ஏமாற்றினர். முடிவில் 92 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது ஆர்.சி.பி.

பந்துவீச்சில் வருண், ரசல் 3 இலக்குகளையும், பேர்குசன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா அணி ஆரம்பம் முதல் அதிரடிகாட்டி அச்சுறுத்தியது. சுப்மன் கீல், வெங்கடேஸ் ஐயர் இணையை பிரிக்க ஆர்.சி.பியால் முடியவில்லை. வெறும் 5.4 பந்துகளில் இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைத் தொட்டது கொல்கத்தா. இணைப்பாட்டமாக 82 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சுப்மன் கில். எனினும் வெங்கடேஸ் ஐயர் இறுதிவரை ஆட்டமிழக்காது ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார். அவர் 41 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். (ம)

**வேலையாட்கள் தேவை**

K.K.S வீதி. 8ம் கட்டையடி
தெல்லிப்பளையில் இயங்கும்
**நேசம் அரைக்கும் ஆலைக்கு**
மில் வேலையாட்கள் தேவை.
மல்லாகம், சுன்னாகம்,
அளவெட்டி, தெல்லிப்பளை,
உரும்பிராய் போன்ற இடங்களில்
வசிப்போர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 922 2282

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் (டச்சுறோட்) பகுதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப்பாதையுடன். பார்வையிடும் நேரம் காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை, தரகர் தேவையில்லை.

077 814 7389, 077 614 7333

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி தெற்கு கரந்தன் பகுதியில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. 14 அடிப் பாதையுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 மீற்றர் தூரம். பார்வையிடும் நேரம் காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை, தரகர் தேவையில்லை.

077 814 7389, 077 614 7333

**அவதானம்!**

**போலிக்காணிகள் விற்பனைக்கு!**

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் சந்திக்கு அருகாமையில் முதலாம் ஒழுங்கை மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள எமது வயற் காணிகளுக்கு சிலர் பாதை அமைத்தும் கம்பி வேலியிட்டும். சிறிது சிறிதாக பிரித்து தமது காணியெனக் கோரி. இங்கு வீடு கட்டலாம் எனவும் கூறி விற்க முயல்கின்றனர். இதற்கு எதிராக நாம் பொலிசாரிடமும். சில குறிப்பிட்ட அதிகாரிகளிடமும் புகார் செய்துள்ளதுடன் நீதிமன்றத்தில் வழக்கும் பதிவு செய்துள்ளோம். இவை யாவும் தற்போதைய கொவிட்-19 சூழ்நிலையால் தாமதமடைந்து செல்கின்றது.

அக்காணிகளை வாங்க முயல்வோர் சரியாக ஆவணங்களை உறுதி செய்தும், வயல் காணிகளில் இன்றுவரை வீடுகட்ட அனுமதியில்லை என்பதை அறிந்தும் செயற்படுங்கள்.

தொடர்புகளுக்கு:
Dr.நிமலன் - 0763666095
Dr.சஞ்சீவன் - 0779908034
Dr.கோபாலகிருஸ்ணன் 0778448179

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.